354

# KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலா நிலயம்.
V7. No.11. 15.3.1934.

m211,N28kN
N34.7.11
199161

354

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு 0-2-6.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0

புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 OCT 1934
MADRAS

Vol 7] 1934 ஞு மார்ச் மீ 15உ [No. 11

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 161

2. தமிழ்ப் பாடம்
வில்லிபாரதம்--கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 163

3. மதுரைக் கோவை. (குறைநயப்பு, தழையேற்பித்தல்)
S. வையாபுரிப் பிள்ளை B.A.B.L. 166

4. அப்பர் (64 கலை-இதிகாசம்-கந்தன் சரிதை)
E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 167

5. கம்பராமாயணம்—(அநுமப் படலம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 170

6. ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை
(ராஜுவெடலே ஜூதாமு ராரே)
P. B. ஸ்ரீநிவாசாச்சாரியார், B. A. 173

7. தன்னையே நயந்த காதல் (சிறு கதை)
K. S. முத்துராமலிங்கம் M. A. 174

8. வர்த்தமானம் 176

## க லா நி ல ய ம்

### கல்சரின் அவசியம் 4.

சங்கங்களையும் செல்வத்தையும் எந்திரங்களை என்னும் தன்மையில் மதிப்பதை மறந்து விவகரிப்பது போன்றேபின்னுஞ்சிலவற்றைஇந்நாள் பலர் கையாண்டு வருகின்றனர். ஜனத்தொகை தேகபலம் சுகாதாரம் முதலியவைகளும் அவ்வகைகளுக்கு உரிய நடுநிலை தடுமாறிச் சுழல்கின்றன. இவைகளும் வேறோர்உண்மை நலம் எய்துவதற்கு இயன்ற எந்திரங்களே. எனினும், இவைகளையே முடிவெனக் கொண்டுவிடாமல், அவைகளால் எய்தவேண்டியதாய் அப்பால் நிற்கின்றவோர் நேர்மையைநோக்குவார் இற்றைநாள் உலகத்தில் எத்தனைபேர் உளர்! பிறந்திருக்கின்ற ஜனங்களை அடக்குமுறையால் ஆள்கின்றார்சிலரெனின், பிறவாதபிரஜைகளுக்குத் 'தடையுத்தரவு' விதிக்கின்ற இப்புதிய ஒரு இயக்கத்தைஎன்னவென்று சொல்லிவியப்பது! "அப்பனே, அம்மையே", என்று நம் கடவுளை மனமுறநேர்மையோடழைக்க நமக்கு வாயுண்டாயின், பின், "மக்களே, நீங்கள் எத்தனைபேர் என்பால் பிறந்துவிட்டீர்" என்று கணக்கெண்ணி ஏங்கவேண்டி நேரிடாது. எந்தையாம் அருட்பெருமிறைவனுக்கு ஆளாகும் வகையற்றுப்போனதால் சிலர் தாம் சிலமக்களைப் பெற்றெடுக்க அஞ்சுகின்றனர். கல்சர் விளக்கின்ற செம்மையும் அமைதியும் சேராத பேய்மனதையண்டியே தாயிலாப் பிள்ளைபோற் பித்தாகித் திரிபவர்தாம் தாய்மார்களாகக் கூசுகின்றனர். சுமை யெடுமின் என்று தான் சும்மாடுமாய்ச் சுமையாளுமாக்கி நாளும் கூத்தாடுகின்ற மனமாயையுட்பட்டுழல்வோர் பிறக்கவரும் பேதைமக்களைத் தமக்கும் நிலத்திற்கும் சுமையேயெனக் கருதி அஞ்சியும் வெள்கியும் கடைபிடிக்கின்றகொள்கையிது. தடைமுறை எத்துணையிருப்பினும் பிள்ளைகள் ஒன்றிரண்டு மீறிப் பிறந்தேதீரும். ஆயின் அவர்களைப் பார்க்குந்தோறும், "கள்வ, காவல் கடந்து நீ எம்வயின் பிறந்தனை" என்று எண்ணவேண்டிய ஈன்றோர் மனநிலையிற் பெருமை இல்லையே. பிறந்தபிள்ளையும்இப்படித் தன்னைப்பெற்றோர் கருதுகின்றனர்என்பதைத் தெரிந்துகொள்ளவல்லமையதை எய்தியவுடன், "எந்தாய், வேண்டா வெறுப்பாகவோ, என்னை ஈன்றீர்" எனக் கேட்கவேண்டிய கேள்வியினும் பெருமையில்லை.கல்சரால்பண்பட்டமனது இந்நிலையையுங்கேள்வியையும்நினைக்கவேநாணும்.பகுத்தறிவும்மனோபாவமுங்கொண்டு மாசுமறுவற்றதூய்மையாயசெம்மையின்முழுமையெதுவெனத்தேர்ந்து,அதுவேகடவுளின் கருத்தும் ஆகலாவதையும் ஓர்ந்து, அக்கருத்தை நடத்திவைக்கும் நினைவோடு நிகழ்கின்ற கல்சரோ, வழங்குவோர்வாய்நின்று வழங்குகின்ற மொழிகளெல்லாம் தனக்குச் சிறிது சுகத்தைத் தருவனபோல் தோன்றுமளவிலேயே தக்கனவாம் என்று விரைந்து அலையாமல் சிந்தனையுள் ஆழ்ந்திருக்கும். ஜனத்தொகை இவ்வளவு, அதற்குக் கிடைக்கக்கூடிய உணவுப்பொருள் இவ்வளவு, என்று துலாக்கோல் தூக்கி, இனிப்பிறக்கப்போகின்றவர்களுக்குஉணவுகிடைக்குமோகிடைக்காதோ வென்று கணக்கிடுவதன்முன், பிறந்திருந்துஉண்டுவளர்கின்றநாம் என்செய்தோம் என்பதனையே கல்சர் ஆராயப்புகும். பிறக்கப்போகின்றவர் உண்ண உணவின்றி இறக்க நேர்வதன்முன் இந்நாள் இருக்கின்றவர்களும், குறைவில்லாமல் உண்பதற்கு உணவும் வாய்க்கப் பெற்றவர்களும், எண்ணரிய நோய்களால்

னைந்துமாள்வது ஏனென வினவும். இதனை வினவுங் கால் கடவுளின் கருத்திற்கு விரோதமாக நடப்பதால் இதுநேர்கின்றதென்பதைஉணர்வது கல்சருக்கு அருமையன்று.காற்றும்வெயிலும்வெளியிடமும்வேண்டியிருக்கின்ற உயிர்களைப் பாடசாலைகளிலும் வியாபார உத்தியோகக் கட்டிடங்களிலும்அடைத்துப்பிசைந்து தின்கின்றவோர் வாழ்க்கையை இன்றியமையாததாக்கி அதற்கு நாடகக் கூட்டங்களையும் குதிரைப்பந்தையங்களையும்பக்கபலமாக வைத்தால்,இனிப்பிறக்கப்படாத பிள்ளைகள்தாம் நம்மைக் காப்பாற்றவேண்டியவர்களாகின்றனர் போலும். "கைத்தொழிலும் வர்த்தகமும் கட்சிப்போரும் வேண்டியிருத்தலா லல்லவோ பட்டினத்திலும் பாடசாலைகளிலும் தொழிற்சாலைகளிலும் இரயில் வண்டிகளிலும், நியாயஸ்தலங்களிலும், ஒட்டடிவீட்டில் இருபது பேருமாக அடைகின்றீர். அடைந்து மனமும் மெய்யுந் தளரத்தளரப் புழுதியளைந்துஉழல்கின்றீர். வாழ்வின்நோக்கம் இதுவன்று, கடவுளின் கருத்து இதுவன்று, என்பது நீங்கள்படும் கஷ்டத்தினாலேயே தெரிந்ததில்லையோ. மனவமைதியும் சித்தசுத்தியும் நல்குகின்ற நெறியொன்று வேறுளதாதலால் இதனை விடுமின். உழுதுண்டு வாழ்வதே வாழ்வென்னும் பொய்யாமொழியைப்புறக்கணித்தபாவம் எழுபிறப்பும் உங்களைத் தொடர்கின்றது," என்று இன்னபல உண்மைகளைக் கல்சரானது அழ அழ நமக்குச் சொல்லும்.

தேக ஆரோக்கியம் வேண்டற்பாலதே எனினும் அதன்வரையில் அதற்கோர் விலையில்லை. கற்றதனால் ஆய பயனை வாலறிவன் நற்றாள் தொழுவதிற் காண்பதே முறைமை ஆவதுபோன்று, "ஆக்கையாற் பயனென், அரன்கோயில் வலம்வந்து பூக்கையால் அட்டிப்போற்றி என்னாத இவ் ஆக்கையாற் பயனென்?" என்று அப்பரோடு ஒருவாயாய்க் கல்சர் இந்நாளிலும் அஞ்சாதுகேட்கும். நோயற்றவாழ்வு ஒருவன்வேண்டுவது எற்றுக்கு? வியாதியால் விளையும் வேதனையைத் தப்புவதற்கேயாயின்,அதற்குத் தற்கொலை என்பதும் தக்க வழி யாகுமே. நோய் இல்லாதிருந்த நல்லநாட்களில் அவன் எண்ணற்கரிய எண்ணங்கள் என் நினைத்தான்; செயற்கரிய என்செய முயன்றான். "சுகமோ, தம்பி, நீ! முதல்முதல் இதுசொல்.நீ சுகமாயிருந்தாலென்ன? இல்லாமற்போனாலென்ன! அதனால் வித்தியாசம் ஒன்றும் இல்லையே!" என்ற கார்லைலின் மொழிவழி கல்சர் கேட்கின்றது.

"அற்றன்று அற்றன்று; செல்வத்தையும் சனத்தொகையையும் சங்கங்களையும்போல், தேகசுகத்தையும் சக்தியையும் வெறும் எந்திரவகையில் மதித்திடலாகாது.இவைகளுக்குத் தம்வரையிலேயே வாஸ்தவமான உபயோக முளது" என்று மிகப்பலர் கூறலாம். மற்றவைகளைவிட இவைகள் ஆன்மநிலையோடு நெருங்கிய ஒரு தொடர்புடையன என்னுந்தன்மையில் அவ்வுரை உண்மையே. ஆன்மநிலை யடையுமொரு நோக்கமே முன்னிற்க அதற்கு நம் உடல்மெலிவு இடையூறாய் இருக்கின்றதென இரங்குவோமாயின், அப்பொழுதே இவ்வுடலையும் ஓர் எந்திரமாகக் கருதி அதனைத் தக்கநெறியில் பாதுகாக்க வேண்டியவர்கள் ஆவோம். அதுவன்றி உடலைஉடலுக்காகவே போற்றுபவராகுதல், மற்றெல்லா எந்திரங்களையும் முழுமுதல் நன்மையென வழிபடும் இழிவுடைப் பேதைமையையே ஒக்கும். அரிதரிதெனும்படி மாநுடராயதன் அருமையை உள்ளபடி உணர்ந்தோர் அனைவரும் தேகத்தைப்பற்றிய நினைவிற்கு முதலிடந்தரமாட்டார். கல்சரால் பண்பட்டிராதருணமே, தேகப்பயிற்சியைப்பற்றியும், உண்ணும்உணவின் வகைகளைப்பற்றியும் அளவுகடந்த ஆரவாரம்செய்ய உடன்படும். இவையெலாம் இடைஇடையே சிறிது சிந்தித்தற் கொத்தனவே யன்றித் தலைமேற் கொண்டு திரியத்தகுவன வாகா: தெய்விக உணர்வும் தருமசிந்தனையும் உருப்பெற் றோங்கி ஒருவன்உள்ளத்தே வளருமாறு எவ்வாறு என்னுமந் நினைவிற்குக் காலை பகல் மாலை முப்பொழுதும் ஆளாகிற்றலே மாந்தரெனும் நிலைக்குரிய எவ்வெவர்க்கும் கடனாகும்.அன்னவர் அல்லாதாரைக் கார்லைல்"வயிற்றில் யானைத்தீப் பற்றியெரியத்தலையிலும் களிமண்பிடித்தகயவர்தாம் தின்னுஞ் சோற்றிற்குப் பதம்பார்த்துக் குறைகூறியவண்ணமா யிருப்பார்" என்று கடிகின்ற சொற்கள் மிகைபடக் கடுமையா யிருக்கின்றனவென்றாலும், உண்மையுடன் பொருந்தியே நடக்கின்றன. "மற்றவர், உணவுதேடி உண்டபின் சாதிப்பதென்னவெனச் சிந்திப்பர்," எனக் கார்லைல் வகுக்கும் இலக்கணம் உடலொடு தொடர்புடைய எல்லாவற்றிற்கும் ஏற்றதாகும்.

இன்னபடி பண்பட்ட குணமுடைமை கல்சரின் பயன். அன்பினது இன்பமும் அறத்தினது அறிவும் எங்கெங்கும் வியாபித்து நம் வாழ்க்கை பண்பும் பயனும் உடையது ஆகவேண்டுமென்பது கல்சரின் நோக்கம்.மேன்மையானவைகளிலெல்லாம் மேன்மையானவை இத்தகைய இனிமையும் அறிவும்ஆம். இவையிரண்டுமே மக்களை விலங்கின்தொகுதியினின்று வேறுபடுத்தி வாழ்க்கையென்னுமொருதத்துவத்தின் முழுமையை அளிக்கவல்லன. வாழ்வில் அமைவதெனுங் கருத்து இவ்வன்பின் இனிமையையும் அறிவின்ஒளியையும் நாடும் அந்நிலையொன்றிற்றான் அடங்கியிருக்கின்றது. இவ்வினிமையையும் ஒளியையும் தானும் எய்திப் பிறர்க்கும் எய்துவிக்க முயல்கின்றவர்களே, பகுத்தறிவையும் கடவுளது தூயகருத்தையும் நடத்திவைக்கின்றவராவர். மற்று, எந்திரங்களை நாட்டுதற்கு உழல்பவர், வீண்பகைக்கும் கலகக்குழப்பங்களுக்குமே பாடுபடுகின்றனர். எந்திரங்களைக் கடந்து அப்பால்உள்ள உயிரினைக்காணவல்ல கண்களுடையதுகல்சரே. பகையைப் பகைக்கின்றது கல்சர். இனிமையின்பால் ஒளியின்பால் கல்சர் மையலுற்றுத் தன்னையுமவைகளுக்குத் துறந்துநிற்கும். இம்மையலிற் பெரியதுயாதெனில், இவ்வினிமையும்ஒளியும் உன்னத நோக்கமாய் உலகெங்கும் உலவவேண்டுமெனும் ஊக்கமே. உலகத்தில் ஒவ்வொருவரும் இச்செம்மையின் முழுமையை எய்தினாலன்றிக் கல்சர் அமைதியடையாது. மன்பதைத் தொகுதிமுற்றும் இவ்வினிமையும் ஒளியும் எட்டவில்லையாயின் அஃது எய்தியுள்ள சிற்சிலர் பூரணஒளியும் இனிமையு மடைந்தவராகா ரென்பது கல்சரது கொள்கை. உண்மையான எண்ணங்களும், உண்மையான அழகும், உண்மையான இன்பமும், உண்மையான அறிவும் ஒன்றுசேர்ந்து உலகமாந்தரனைவரையும் ஒருங்கே இணைத்துவைக்கும் அந்நன்னாளை முன்னோக்கிநின்று இவைகளுக்குமாறான அறியாமையும் அழுக்காறும் பேராசையும் பெருங்கோபமும் தலையெடுக்கவொட்டாமல் தடுத்திருப்பது கல்சரே யாதலால் இப்பின்னவை மலிந்திருக்கின்றஇக்காலம், கல்சரின் அவசியத்தை என்

19916
M211.N7
N34-7.11



காட்டித்தருகின்றது. பொதுஜனங்களென்றும் பாமரர்களென்றும் சிலர்க்கு ஒரு பேரைத் தாமேவைத்து அவர்களுடைய நன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் ஏற்றவழி யிவையிவை யென்று தம்முடைய கொள்கைகளைப் 'பிரசாரங்கள்' செய்பவர் எண்ணிறந்தோர் இந்நாள் இருக்கின்றனர்.தங்கள் சமயச் சார்பாகவும் கட்சியின் சார்பாகவும் பொதுஜனங்களுக்குப் பல்வேறு பாடங்களைப் புகட்டிவைத்தல் நேரிதே என்றேனும் அன்றென்றேனும் நாமிங்கு வாதிக்கவரவில்லை. கல்சர் அதன் வேலையைச் செய்யப்புகுவது வேறுவிதமென்பதொன்றே நாமிங்குக் குறிகொள்ள வேண்டியதாம். கல்சரோ, கல்லாத பாமரர் மட்டத்திற்குத் தன்னைத் தாழ்த்திக்கொள்ளாது; அவர்களைத் தன்னளவுகைதந்து உயர்த்திக்கொள்ளும். என்கட்சி உன்கட்சி என்றும், என் கொள்கை உன்கொள்கை என்றும், இந்தமுறைஅந்தமுறையென்றும் வாதித்துப் பொதுஜனங்களைப் பொருளற்ற சொற்றொடர்களின் ஆரவாரத்தால் தன்பக்கம்சேர்த்துக்கொள்ளக் கல்சரோ ஒருபோதும் தலைப்படாது. குணமென்னுங் குன்றேறி நின்றார் முன்னையோர் பல மேன்மையோர், அறிவெனும் பரிதியாய் விளங்கினர், அருளெனும் மேகமாய்ப் பொழிந்தனர், கலையெனும் மதியமாய்த் திகழ்ந்தனர், அவ்வித்தகத் தத்துவருணர்வும்,தண்ணளி தலைசிறந்த வள்ளலார் செயல்களின் மாண்பும், சீரிய கூரிய கவிவரர் மொழிகளின் அழகும், ஜனங்களுக்கு இடையே எளிதில் பரவுமாறு புரிந்து அவரவர் தத்தமக்குரிய நெறிமுறையில் உய்யும்வகை நாடுகின்ற நேர்மையுடைத்து, அலகிலாத் தூய்மைவாய்ந்த கல்சரெனுமக் கடவுட் காட்சி.

இதுதான் பொதுஜன நன்மை என்னுமவ் வாசகத்தின் மெய்கண்ட உரையாகும். கல்சருடையவர்களே வாஸ்தவமான சுதந்தரத்தையும் சமத்துவத்தையும் போதிக்கவல்லவர். கல்சருடைய பெரியோர், நிரந்தரமான நூல்களின் நற்கல்வியைச் சனங்களுக்கிடையே கொண்டுபோய் உலாவரச்செய்து அரியணையமர்த்திமுடிசூட்ட வேண்டுமென்னும் ஆர்வமுடையவராவார். ஆள்வதுகல்வியாயின் குடியனைத்தும் ஒருபடித்தாம். கலைகளின்முன்னே எவர்பெரியர்,எவர் சிறியர்? எவர் வலியர்,எவர் எளியர்? எவர்உடையவர், எவர் வறியர்? பொது ஜனங்களுக்குத் தம்மைத் 'தலைவர்'களாக்கிக் கொள்ளமாட்டார் கல்சருடையோர். ஏனெனில், அவர்களது காலைப் பிடித்துக்கொள்கின்றவர்களுக்கே 'தலைவர்' என்னும்பேர் சூட்டியிருக்கக் காண்கின்றோம். காலைப்பிடித்துக்கொள்வதெல்லாம் அந்தாம்நோக்கில் அவ்வோட்டுப்பெட்டி இருக்குமிடம் இழுத்துப்போய், பழிப்பவரைப் பழித்தும் இச்சகம் பாடுமிடத்துப் பாடியும், ஒவ்வோர்சமயம் அடிப்பவரை அடித்தும் சிலசாதித்துவைக்கப்புகுவதற்குப் பதிலாய்க் கல்சர்உடையவர் அப்பொதுஜனங்களுக்குநண்பர்களாகவே இருந்து இனிமையின்பால் ஒளியின்பால் அவர்களைக் கைகோத்து அளவளாவி அழைத்துச்செல்வர். பொதுஜனங்களுக்குத் தாம் ஒன்றும் பிரசாரஞ்செய்யார்; அவர்களைத் தெய்வமாக்கவிகளுடன் பேசவைப்பர். சங்கங்கள் கூட்டிவைப்பார், சகோதரர்கள் ஆக்கிவைப்பார். கடவுளைப் பழிக்கமாட்டார், காக்கவும் மாட்டார்; கடவுள்நெறி இன்னதென்று அவரவர் தாமே கண்டுணருமாறு கருத்தைத் திருத்துதற்கியன்ற கலைகளின்பால் கவர்ந்துகொள்வர். இத்தகைய களவியல் கல்சருக்கே உளது. இதனினும் அதிகம் அவசியமானது இந்நாள் வேறொன்றுளதோ விளம்புவீர்!

முற்றிற்று

# தமிழ்ப்பாடம் 111.

## வில்லிபாரதம்—உத்தியோக பருவம்.

[149-வது பக்கத் தொடர்ச்சி]

### கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

கண்ணனுடைய கருத்தே தன் கருத்தும் என்னவே சகாதேவன் சொன்னவுடன், மற்றவரைப்போலல்லாமல் இவன் ஏது தந்திரமாய் இப்படிப் பதில் உரைத்தான் என வியந்த கண்ணன் அவனைத் தனித்தவோரிடத்திற்கு அழைத்துச்சென்று, அவனது திறமையைச் சோதிக்கப் புகுந்தவனாய், 'இப்பாரதயுத்தம் நடக்காமல் யாவரும் உய்யும்படியான வோர்உபாயம் சொல்' எனக் கேட்டனன். இதற்கு உத்தரமும் அதுபற்றி நிகழ்ந்த நிகழ்ச்சியும் இனிமேல்வரும் ஏழு பாசுரங்களில் அடங்கியிருக்கின்றன. இந்தக் காவியத்தின் சுவையிற் சிறந்ததோர் பாகங்களுள் இதுவொன்று.

---

நீபா ரதவமரில் யாவரையும் நீறாக்கிப்
பூபாரந் தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணா
கோபாலா போரேறே கோவிந்தா நீயன்றி
மாபா ரதமகற்ற மற்றார்கொல் வல்லாரே. 25

பதவுரை.

புயல்வண்ணா - மேகநிறமுடையவனே, கோபாலா - கோபாலனே, போர் ஏறே - யுத்தத்தில் ஆண் சிங்கம் போன்றவனே, கோவிந்தா - கோவிந்தனே, நீ - நீ, பாரத அமரில் - பாரத யுத்தத்திலே, யாவரையும் - எல்லாரையும், நீறு ஆக்கி - சாம்பலாக்கி, பூ - பூமியினுடைய, பாரம் - சுமையை, தீர்க்க - நீக்குவதற்கு, புரிந்தாய் - விரும்பியிருக்கின்றாய் (ஆதலால்). மா - பெரிய, பாரதம் - பாரதயுத்தத்தை, அகற்ற - தடுக்க, நீ அன்றி - உன்னைத்தவிர, மற்று ஆர்கொல் - வேறுயார்தான், வல்லார் - வல்லவராவர்.

---

பாராளக்கன் னிகற்பார்த்தனைமுன் கொன்றணங்கின்
காரார் குழல்களைந்து காலிற் றளைபூட்டி
நேராகக் கைபிடித்து நின்னையுநான் கட்டுவனேல்
வாராமற் காக்கலாம் மாபாரத மென்றான். 26

பதவுரை.

கன்னன் - கர்ணன், பார் ஆள - பூமியை ஆளும் பொருட்டு, இகல் - பகைமிகுந்த, பார்த்தனை - அர்ச்சுனனை, முன் கொன்று - முதலிலே கொன்றுவிட்டு, அணங்கின் - திரௌபதியினது, கார் ஆர் - மேகம் போன்ற, குழல் - கூந்தலை, களைந்து - அரிந்துவிட்டு, நின்னையும் - உன்னையும், காலில் தளைபூட்டி, - காலில் விலங்கிட்டு, நேராக - எதிராக, கைபிடித்து - கையையும் பிடித்து, நான் - நான், கட்டுவன் ஏல் - கட்டுவ

னேயானால், மா பாரதம் - பெரிய பாரத யுத்தத்தை, வாராமல்-வரவொட்டாமல், காக்கலாம்- தடுக்கலாம், என்றான் - என்று சகாதேவன் கூறினான்.

---

முன்னநீ கூறியவை யெல்லா முடித்தாலு
மென்னைநீ கட்டுமா றெவ்வா றெனமாய
னுன்னை நீதானு முணராதா யுன்வடிவந்
தன்னை நீகாட்டத் தளைந்திடுவன் யானென்றான். 27

பதவுரை.

(அவ்வாறு சகாதேவன் கூற) மாயன் - மாயனான கிருஷ்ணன், (சகாதேவனைப் பார்த்து) முன்னம்-முதலிலே, நீ - நீ, கூறியவையெல்லாம் - கர்ணனுக்குப்பட்டம் கட்டுதல் அர்ச்சுனனைக்கொல்லுதல் திரௌபதியின் கூந்தலைக் களைதல் எனக்கூறிய இவைகளையெல்லாம், முடித்தாலும் - செய்துமுடித்தாலும், என்னை - என்னை, நீ-நீ, கட்டும் ஆறு-கட்டும்வகை, எ ஆறு- எவ்வகை இயலும், என - என்று வினவ, (சகாதேவன்) உன்னை - உன்னை, நீதானும்-நீயே, உணராதாய்- தெரிந்துகொள்ளாதவனே, உன் - உன்னுடைய, வடிவம் தனை - நிஜஉருவத்தை, நீ காட்ட-நீ காட்டுவாயானால், யான் - நான், தளைந்திடுவன் - கட்டிவிடுவேன், என்றான் - என்று விளம்பினான்.

---

மாயவனு மன்பன் மனமறிவான் கட்டுகவென்
றாயவடிவு பதினா றாயிரங் கொண்டான்
தூயவனு மூலமாந் தோற்றமுணர்ந் தெவ்வுலகுந்
தாயவடி யிணைக டன்கருத்தி னாற்பிணித்தான் 28

பதவுரை.

(அது கேட்ட) மாயவனும் - கிருஷ்ணனும், அன்பன்- பக்தியிற் பெரியவனாகிய சகாதேவனது, மனம்-மனத்திட்பத்தை, அறிவான் - அறியும்பொருட்டு, கட்டுக-கட்டுவாயாக, என்று-என்று சொல்லி, ஆய - ஒன்றுபோல் ஒன்று பொருந்தியிருக்கின்ற, வடிவு - உருவங்கள், பதினாறு ஆயிரம் - பதினாறு ஆயிரம், கொண்டான் - எடுத்துக்கொண்டான்.

தூயவனும் - பரிசுத்தனான சகாதேவனும், மூலம் ஆம் - உருவங்களுக்கெல்லாம் மூலம் ஆகிய, தோற்றம் - நிஜ உருவத்தை, உணர்ந்து - தெரிந்துகொண்டு, எ உலகும் - எல்லா உலகங்களையும், தாய (மகாபலி சக்கரவர்த்தியினிடத்தில் மண் அளந்துகொள்ளும் பொழுது) தாவிய, அடியிணைகள் - இரண்டு பாதங்களையும், தன் - தன்னுடைய, கருத்தினால் - மனத்தினால், பிணித்தான் - கட்டிவிட்டான்.

---

நீதேவ னென்றறிந்து நெஞ்சாற் றனைக்கட்டுஞ்
சாதேவன் கண்களிக்கத் தானேயாய் முன்னின்றான்
பூதேவருங் கனகப் பூங்கா நிழல்வைகு
மாதேவருந் தேடிக் காணா மலரடியோன். 29

பதவுரை.

(இன்னபடி) நீ - நீதான், தேவன் - தேவாதிதேவன், என்று - என்று, அறிந்து - தெரிந்துகொண்டு, நெஞ்சால் - மனத்தினால், தனை - தன்னை, கட்டும் - கட்டுகின்ற, சாதேவன் - சகாதேவனது, கண்களிக்க - கண்கள் களிக்கும்படி, தானே ஆய் - தன்னுடைய நிஜரூபத்தோடு,

பூதேவரும் - பூமியில் வசிக்கும் தேவர்கள்எனப் படும் அந்தணர்களும், கனகம் - பொன்மயமான, பூ- அழகிய, கா - கற்பகச் சோலையின், நிழல் - நிழலில், வைகும் – வசிக்கின்ற, மா - சிறந்த, தேவரும் - விண்ணவர்களும், தேடி - மிகமிகத் தேடியும், காணா - கண்டிராத, மலர் - தாமரைமலர்போன்ற, அடியோன்- பாதங்களை உடையவனாகிய திருமால்,

முன் நின்றான் - சகாதேவனுக்கு எதிரே காட்சி கொடுத்து நின்றான்.

---

அன்பா லின்றென்னை யறிந்தே பிணித்தமைநன்
றென்பாதந் தன்னையினி விடுக வென்றுரைப்ப
வன்பா ரதப்போரில் வந்தடைந்தே மைவரையு
நின்பார் வையாற் காக்கவேண்டு நெடுமாலே. 30

(நின்று) அன்பால்-பக்தியினால், என்னை - என்னை, அறிந்தே - அறிந்து, இன்று - இந்நாள், பிணித்தமை- நீ கட்டியது, நன்று - மிகவும் நன்றாக இருக்கின்றது. இனி - இனிமேல், என் பாதம்தன்னை - என்னுடைய பாதங்களை, விடுக - விட்டுவிடு, என்று - என்று, உரைப்ப - கிருஷ்ணன் சொல்ல, (சகாதேவன்)

நெடுமாலே - திருமாலே, வந்து அடைந்தேம் - வந்து உன்னைச் சரண் அடைந்திருக்கின்ற நாங்கள், ஐவரையும்- ஐந்துபேரையும், வன்- கொடிய, பாரதப் போரில் - பாரதயுத்தத்திலே, நின்-உன்னுடைய, பார்வையால் - பார்வையினால், காக்கவேண்டும் - காத்தருளவேண்டும். (என்றான்)

---

என்றென் றிறைஞ்சி யிருதா மரைத்தாளி
லொன்றுங் கதிர்முடியாற் கோமென் றுரைத்தருளி
யின்றிங் கிருவேமு மிப்போ துரைத்தமொழி
யொன்றும் பிறரறிய வோதா தொழிகென்றான். 30

பதவுரை

என்று என்று -இவ்வாறு எங்களைக் காக்கவேண்டுமென்று பலமுறை வேண்டி, இறைஞ்சி - வணங்கி, இரு-இரண்டு, தாமரைதாளில்- தாமரைமலர்போன்ற பாதங்களில், ஒன்றும் - பொருந்துகின்ற, கதிர் முடியாற்கு - பிரகாசம் பொருந்திய கிரீடத்தை அணிந்த சகாதேவனுக்கு, (கண்ணபிரான்) ஓம் என்று - அவ்வாறே உங்களைக் காக்கின்றேன் என்று, உரைத்து அருளி- வாக்குக்கொடுத்து அருளி, இன்று- இன்றையதினம், இங்கு - இவ்விடத்தில், இருவேமும் - நாம் இருவரும், இப்போது-இச்சமயம், உரைத்த - பேசிக்கொண்ட, மொழி ஒன்றும்-வார்த்தை ஒன்றும், பிறர் அறிய - மற்றவர் அறியும்படி, ஓதாது ஒழிக - பேசாமல் இருக்கக்கடவாய், என்றான் - என்று கூறினான்.

விரிவுரை:-இவ்வேழுபாசுரங்களின் பொருளையும் முழுதாய் மனத்திற்கொண்டு, உன்ன உன்ன உவகை பெருகும். வீமன் முதலிய ஏனையோர் அனையனாய்த் தானேயெழுந்து யாதும் இயம்பாத இச்சகாதேவனை, மிகப்புகழ்ந்து, யாது நின் கருத்தெனக் கண்ணபிரான் கேட்டபோது, மற்றவர்போலவே இவனும் மாயைப் பெருவலையில் சிக்குகின்றானோஎனச் சோதிக்க நினைத்தான். இவனோ கண்ணன்வீசிய கண்ணியிற் பிணிப்புறாமல், திருவுளக் கருத்தெதுவோ அதுவே தனக்குங் கருத்தென்று தப்பிவிட்டதால் மாயனது தந்திரமே தோற்றுநின்றது. ஆதலின், கண்ணன் அவனைத்தனியே அழைத்துச் சென்று உண்மையில் ஓர் உபாயம் கேட்பான்போல்போலிமுகங்காட்டிப் பாரதப்போர்பயிலா வண்ணம்உரைக்கக்கேட்டான். அந்த வஞ்சனையும், 'நீயன்றி மாபாரத மகற்ற மற்றார்கொல் வல்லாரே' என்ற சகாதேவனது எதிர்வீச்சினால் வீழ்ந்தது—



"கோவிந்தா, இந்தப் பாரதப்போரில் நாங்களுமே அடங்க யாவரும்நீறாகிப்பூபாரம்தீரவேண்டுமென்று நீ யாவையும் இழைக்கின்றாய்; ஆதலின் பாரதப்போர் நிகழாமல் காக்கவேண்டுமெனில் நின் திருவுளக் கருத்தன்றோ மாறவேண்டும்," என்பதை எடுத்துக்காட்டிக் கண்ணனது போலிக்கு எதிர்ப்போலியாய்த் தானும் ஒரு உபாயம் சொல்லுவான்போல், "தன் பராக்கிரம மிகுதியால் ஒருவருக்கும் ஒருபோதும் அடங்கமாட்டாக் குணமுடைய கர்ணனுக்கே பட்டம் கட்டுதல் இப் பாரதப்போரைத் தடுப்பதற்கு மிகவும் அவசியமாகும். அவ்வாறின்றிக் கௌரவர் பாண்டவர் இருவரிலும் எவராயினும் மற்றவர்சும்மாவிருக்கமாட்டார். ஆனால் கர்ணனுக்கு நேர் கடும்பகை கொண்டுள்ள அர்ச்சுனன் அன்னதற்கோ உயிருள்ளளவும் ஒருபோதும் உடன்படான். ஆதலின் இவ்வர்ச்சுனனை நாமே முதலில் கொன்றுவிடவேண்டியது இன்றியமையாததாகின்றது. இதனாலும் பாரதப்போர் நின்றதென்பதில்லை. தானுற்றபழியைத் தலைவிரிகோலமாய்ப்புலம்பி நிற்கும் அத் திரௌபதி தன்குழலை உறஉறக் காட்டி, கழறிய வஞ்சினத்தைஎமக்கு நினைப்புஊட்டிஊட்டிப் 'போரின்றி ஒழிவீராயின், பாண்டவர்காள், அன்று விரித்த அரும்கூந்தலை வல்வினையேன் என்று முடிப்பது இனி' என்னப் பகைமிக மேன்மேல் தூண்டிக் கொண்டே யிருப்பாள். ஆதலின் இதனைத் தடுக்கும் வகையொன்று நாடுவான்போல்,நகை செய்து, அவள் கூந்தலைக் களைந்துவிட்டால் பின் எதனைக் காட்டிப் புலம்புவாள்; முடிப்பதற்கு மயிர் இலதாகுமாதலின் வஞ்சினமும் வறிதேயாக வாயடங்கி அவள் விலகுதற்கு 'ஈதன்றி வேறோர் நெறி கண்டிலேன்' என்றனன்.

இவை மூன்றும் இயற்றிமுற்றல் அருமையென்று இயம்ப வேண்டுமோ. மற்று அவைதம்மை முடித்தாலும் அதனிலும் அருமையாயது வேறொன்று உளது. தற்காலம் பாரதப்போர் மூள்வதற்கு உதவியா யுள்ளவெல்லாம் தணிந்தாலும் புதியபுதிய காரணங்கள் கற்பிப்பது"கண்ணனே உனக்குஅருமையோ!நீ இத்தரைதனில் சுழல்வரும்வரையில் போரொன் றிலாது போகாது. ஆதலின் இந்தப் பாரதப்போர் பயிலாவண்ணம் நீ என்னை வினவிய உபாயங்களுள் உன்னை யான் கையும் தாளும் இறுகப் பிணித்து இறுத்தவேண்டியதே முதன்மை யாகும், அறிதியோ " எனச் சகாதேவன் பகர்ந்தான்.

இதனிலும்தோற்றவன் மாயவனே. எனவே அவன் பின்னுமோர் புணர்ப்பினால் சகாதேவனை முதுகுகாண உன்னினான்போல், "மைத்துன, பரிகசம் சில நீ பரக்கப் பேசுகின்றாய். ஆயினும், நின்னால் வல்லதிது, வல்லதுஅல்லாதது இது என ஓராவகையில், என்னையும் கட்டல்,என்று கழறத் துணிந்தனை. நின்னால்ஆவதோ இது,இயம்புதி' என்றனன். தத்துவப் பேரறிஞன்சகாதேவனேயன்றி வேறு யாவரேயாயினும்கண்ணபிரான் அறைகூவிய இவ்வாசகத்தின்முன்னர்க் குறையுற்றுக் கழிந்திருப்பார். இவனோ சிறிதுந் தாழாது செவ்விக்குரியபடி உயர்ந்தனன். "கிருஷ்ணா! நின் அறியாமை கண்டு நான் நகுகின்றேன். உன்னையே நீ உணர்ந்திலையோ,மற்று மறந்தனையோ; அன்றெனின் இவ்வியப்புறு வினா நின்வாய் வந்திராது. தேவகியின் திருவயிறுவாய்த்து, பொதுவர்குடிப் புகுந்து,துவாரகைக்கு நாதனாய் நடிக்கின்ற இம்மாமாய வேடத்தில் உன்னை ஒருவராலும் கட்டிவைக்க இயலாதென்பது உண்மையே. ஆயினும் இவ்வேடமேதானோ நீ, வேறிலையோ, விளம்புவாய்! நாடகத்தில் ஒருவன் தரித்திருக்கும் வேடமே தானென்று எந்நாளும் நினைப்பானாயின் அவனினும் நகைக்கு இலக்காய் நிற்கின்றவர் யாரே உளர். நீயும், யாருக்கும் எப்போதும் எவ்விடத்தும் கட்டுக் கடங்காக் கண்ணனென்றே உன்னைக் கருதிக்கொண்டனை போலும். உன்னிலும் உண்மையாய் உன்னையே யான் அறிவேன். அன்பர்க் கெளியனாய் அடைந்தோர்க்கு அடங்கிநிற்கும் அவ்வருள் வள்ளலாம்திருமாலே அல்லனோ நீ. இப்பொழுதும் உன் கிருஷ்ணவேஷத்தைச் சிறிது களைந்துவிட்டுத் தன்னையே தமர்க்கு நல்குகின்ற அம் மூலத் திருவுருவில் நீ தோன்றுவாயாயின் யான் உன்னைப் பிணிக்க வல்லனோ அல்லனோ காண்" எனச் செப்பினான்.

எனவே, கண்ணனது சூழ்ச்சி இங்கும் பலித்ததில்லை. சகாதேவனது மெய்யுணர்வே வாகை கொண்டது. ஆயினும் கண்ணன் இன்னும் கையறவெய்தாது பின்னுமோர் மாயம்புரிவானாய்க் 'கட்டுக' என்று அச்சகாதேவன் வேண்டியவாறே திகிரியும் வளையும் ஏந்திய கரங்களொடு திருமாலுருவத்தில்,ஒன்றில்லை, பதினாறாயிரம் கொண்டு நின்றான். இவைகளில் மூலம் ஒன்றே, மற்றவெல்லாம் சாயைகள். ஏதென்று தேர்ந்து இவ்விளவல் தன்னை ஈண்டுப் பிணிப்பதற்கு இயலுமென இம்மாயம் அவன் புரிந்தானானாலும், ஒருபோதும் பிழைக்காத பேரன்பே தனது துணையாய்க் கொண்டுள்ள தூயவனும் மூலமாம் தோற்றமுணர்ந்து மாவலிபால் மூவடிமண் அளக்கப் புக்கநாள் உலகெலாம் உள்ளடிஅடக்கிய அத்தாளினைத் தளராப் பிடியால் தன்னகம் நிறுத்திக்கொண்டனன். வென்றிக்கு மேன்மேலும் முயன்றவிப் பண்ணவன் அன்பர்க்கேமுற்றிலும்தான் தோற்றுவிட்டா னென்பதையுணர்ந்த மகிழ்ச்சியிலே மிகப்பொங்கி,முனிவரும் விண்ணவரும் மறைநான்கும் காணரிய திருவுருவைப் பக்தியிற் சிறந்த அந்தச் சகாதேவனுக்குக் காட்சியளித்தனன்.

இப் பேறு யாரே பெற்றார். அதுவுமன்றி "இனி என் பாதந்தனை விடுக" எனக் கண்ணனே தன் பக்தனை வேண்டிக்கொள்ளவும் ஆயிற்று. கிடைத்த செவ்வியைக் கைகடக்கவிடுவான் சகாதேவன் அல்லன். கருத்தினால் பிடித்த பிணியை அவிழ்த்தாலன்றி இடம்பெயர்ந்து அகல்வதற்கு அவ் வருள்வள்ளலால் ஆகாது. இதுவே சமயமென்று, 'கண்ணா! யாவரையும் நீறாக்க நினைத்திருக்கின்றாய். எங்களுக்குத் துணையென்று நீ நிற்பதெல்லாம் நின் திருவுள்ளம் அது நிகழ்வதற்கே. ஆயினும் நாங்கள் உன்னைச் சரண்புகுந்து இருக்கின்றோம். எங்கள் ஐவரையேனும், அப் பாரதப்போரில் மாய்க்காவண்ணம் கடைக்கண் அருளவேண்டும். இவ்வரம் நீ தருவதன்முன் அன்புத்தளையை அவிழ்த்திட மாட்டேன்' என்று இறைஞ்சினான்.

'ஓம்' என்பதன்றி அத்திருமால் உரைக்கும் வகை வேறு யில்லையே. கட்டும் அவிழ்ந்தது. தன்னுடைய வேடத்தை மீண்டும் அவன் தாங்கலானான். அதனைத் தரித்ததற்குஅறிகுறியாக, இன்று இங்குஇருவேமும் உரைத்த மொழியொன்றும் பிறரறிய ஓதாது ஒழிக வெனத் தந்திரமு மிரகசியமுந் தானே வாலாயின.

ஆதலினால், பாண்டவரைக் காத்தது உதிட்டிரன் அறம் அன்று; மலைகண்ட தன்ன வீமன்தன் மறத்

தண்டு மன்று; மகவான் மைந்தன் பொருவரு சிலையு மன்று; இருவர் பொருந் திறலும் அன்று; பாஞ்சாலி பரக்கவிட்ட குழலுமன்று; வாய்மையே நோக்கின், நெடுமால் நின்ற நிலையும் அன்று; இவ்விளையோன் தன் தூய்மையிற் றளராப் பக்தியே பாண்டவரை உய்யக் கண்டது.

# மதுரைக் கோவை

[155-வது பக்கத் தொடர்ச்சி]

## X. குறை நயப்பு.

தலைவனைக் கண்டமை கூறல்

மழைக்கோல மாட மதரா புரேசர்
வயிரமணிக்
குழைக்கோல வல்லிக் கிடங்கொடுப் பார்பொற்
குலகிரியி
லுழைக்கோல நீல விழியா ளொருவர்கை
யோடுணங்குந்
தழைக்கோ லமுமவர் கோலமுங் காணத்
தகாதெனக்கே. 150.

மறுத்த லரிதென்றல்

எனைப்பார்ப்ப ரன்றி (?) லலகோட லல்குற்
கிறகுங்கல்வி
தனைப்பார்ப்ப ருள்ளந் தளர்வர்தள் ளாடுவர்
தண்டிவரால்
சினைப்பா[ர்]த்த வாவித் திருவால வாயர்
சிலம்பில்வஞ்சி
யுனைப்பார்ப்ப தன்றி யினிவினை யேனென்
னுரைப்பதுவே. 151.

மறைந்தவ ளருகல்

சங்கத் தமிழுந் தமிழே டெதிர்சென்ற
[1]தண்டுறையுந்
திங்கட் கலையமு தந்தரு பேருந்
திரையெறியுங்
கங்கைச் சடிலர் கடம்பா டவிநின்ற
காட்சியும்போல்
மங்கைப் பருவநல் லாயுள தேயொரு
மானகரே. 152.

தோழி புலந்து கூறல்

வெற்புஞ் சிலைகொண்ட வெள்ளிமன் றுளர்
வியன்கிரியென்
சொற்புன் கிழமை பொறுத்தணங் கேயுங்கள்
தொல்குலத்தின்
பொற்பும் புகழு மடனுமு மில்லறம்
பூண்டுவிடாக்
கற்புந் தரமு நிலைபெறு மாறு
கருதுகவே. 153.

தலைவன் மடலேறுவ னென்றல்

கிளிக்கே மதுரக் தருமின்சொ லாய்கொண்ட
கேண்மையினி
[2]யொளிக்கே னெனுந்தர மல்லகண் டாய்கொன்றை
யூறுசெந்தேன்
துளிக்கே யலம்புஞ் சடைச்சொக்கர் மால்வரைத்
தோன்றல்கையில்
வெளிக்கே வருவை கிழிக்கே தெரியநம்
வீதியிலே. 154.

தலைவி நோதல்

தொல்லைத் தனிமர பும்பெரு நாணமுஞ்
சோர்வுபடா
தெல்லைப் படுநமக் கென்றுகண் டாய்தரை
யேழுங்கொண்டு
மல்லைப் பொருபுயத் தார்சொக்க நாதர்
மதுரைவெற்பில்
முல்லைக் குழலி யெனையய லாக
மொழிந்தனையே. 155.

துறைநயப்பு முற்றும்.

---

## XI. தழை யேற்பித்தல்.

தோழி தழை யேற்றல்

மருப்பா[?] சடைமுடி யார்மது ரேசர்
வடித்ததமிழ்ப்
பொருப்பா வுனக்கினி யாவரொப் பார்புதுப்
பூங்கமலத்
திருப்பாவை செவ்வியும் யான்செய்குற் றேவலுஞ்
சேரநிற்கச்
சுருப்பார வண்டழை யின்றல்ல வோவந்து
சோபித்ததே. 156.

கூறுவன [வ]றியாது வந்தேனெனத் தழையேற்பித்தல்

விண்டார் புரஞ்செற்ற வெள்ளிமன் றுளர்
வியன்கிரியிற்
றண்டா மரைத்திரு வேயென்சொல் வேன்சரு
காயுணங்கும்
வண்டார் தழையு மவர்நின்ற சோகமும்
வாசகமுங்
கண்டா லதற்கு மறுமொழி யாதொன்றுங்
காண்கிலனே. 157.

கைம்மாறு செய்ய வேண்டுமெனத் தழையேற்பித்தல்

வெறிக்குங் குமப்புய வெள்ளிமன் றுளர்
வியன்கிரிமான்
மறிக்குங் கிளிக்கும் புனம்புக்க நாள்மதி
யாதுநம்மைக்
குறிக்குங் கடகரிக் கோடுபுய்த் தாளக்
குறித்தகையா
னெறிக்குந் தழையல்ல வேவணங் கேயென்
னினைவதுவே. 158.

தலைவியைத் தழை யேற்பித்தல்

கழைக்குந் தறிக்கு மடங்கா திருகவு
ளுங்கடங்
கொழிக்குங் கடாசலத் தார்சொக்க நாயகர்
கூடல்வெற்பில்
மழைக்கொந் தளக மயிலேயுன் கோல
வனப்பனைத்துந்
தழைக்குந் தழையித் தழையிது வாடுந்
தழையல்லவே. 159.

(பிரதி) 1. தண்டுழையுந். 2. மொழிக்கே.



தழைவியந் துரைத்தல்

ஆயுந் தமிழறி வாரால வாய
ரணிவரைத்தேன்
பாயுந் தழைபட்ட பாடுகண் டால்மடப்
பாவைகொங்கை
தோயும் பொழுதுன் றிருமார்பு மின்பத்
துறைதெளிந்த
நீயும் புயமுமங் கேதுப டாது
நெடுந்தகையே. 160.

தழை யேற்பித்தல் முற்றும்

---

# அப்பர்

## அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்.—31. இதிகாசம்

[153-வது பக்கத் தொடர்ச்சி]

### 6. கந்தன்; "தன்னிகரில்லாத் தலைவன்"

#### (a) புறப்பொருள் ஒழுக்கம்

மகாபாரதகாவியத்தின்கதாநாயகர்களானபாண்டவ கௌரவர்களின் பொதுக்கூட்டத்தில் தனக்கு நிகரற்றவனும், தேவேந்திரனுக்குத் துணைபுரியப் பல உலகங்களிலும் திக்கு விஜயம் செய்தவனும் ஆகிய அர்ச்சுனனை, பெருந்தன்மையில் இராமனுக்கு ஒப்பிடக்கூடியவனென்று வில்லிபுத்தூராழ்வார் கூறுவார். இராமசந்திரனை இயற்கைக்கிணங்கிய முறைப்படிவால்மீகி விளக்குங்காலையில் அவன் விஷ்ணுவின் அவதாரமேயாயினும்மனிதர்க்குரியமுக்குணங்களும் வாய்ந்தவனென்பதும் அதனால் சிற்சில இடங்களில், நாம் எதிர்பார்க்கும் பெருமையை எட்டாமல் பின்பட்டானென்பதும்ஒருவாறு வெளியாகின்றது.உண்மைநிலை தவறாது வால்மீகி எழுதியதினால், இராமனை அவர் கம்பன்போல் ஒரே உயர்வில் வைத்துச் சித்ரிக்கவில்லை. முருகக் கடவுளை ஆதித்த இருதய மந்திரத்தின் இடையில் செபித்ததும், வால்மீகி, ஸ்கந்தர் பெருமையைஒவ்வொருஇடங்களில் குறிப்பிடுவதும் உற்று நோக்கில் கந்தனது தன்மைகளில் சில இராமனிட மிருந்தனவென்பதுவிளங்குமேயன்றி,கந்தனது சிறப்பு முற்றும் இராமனிடங் காணஇயலாது. ஏனெனில் முருகக்கடவுள் உற்பத்திமுதல் சிவசொரூபமாயிருந்ததால், அளவற்ற சக்தியும், கருணையும் பொருந்திய சத்துவகுணவடிவாய்த் திகழ்கின்றனர். சூரன் முதலியோரைத் தண்டிக்கும் காலையும் அன்பும் கருணையு மளவிலாமல் விளங்கின. ஆகையால் ஸ்கந்தமே காப்பியதலைவரில் எக்காலத்தும் ஒப்பற்ற தலைவரைக் காட்டுவதாகும்.

நமது சமயகுரவர் மூவரும் முருகக் கடவுளின் ஒப்பிலாத்தத்துவத்தைத்தேவாரத்தில் வெகுசூக்குமமாய்க் காட்டுகின்றனர். தமிழின் பெருமையைக் காட்ட வன்றொண்டர் சிவபெருமானை நோக்கி, "செந்தமிழ்த்திறம் வல்லிரோ? செங்கணாவ முன்கையிலாடவே, வந்து நிற்குமி தென்கொலோ!" என்று கூறுவதுபோல், சிவபெருமான் திருவுருவ பாகங்களைக் குறித்தும், அவற்றின் கருத்தைச் சிறிது வெளிப்படுத்தியுங் கூறுமிடத்து, சுப்பிரமண்யக் கடவுளின் தாதை இத்தன்மையவர், இத்திருவுருவத்தவர், இவ்வாபரணங்கள் அணிந்தவர் என்றும், அவ்வத்தொடர்மொழிகளுக்குத்தக்கவாறு கந்தன்சிறப்புவிளங்கும்அடைமொழிகளும் கூறுவர். அவற்றைநிதானித்துக் காணுமிடத்து முருகக்கடவுளின் ஒப்பிலாத்தன்மை நன்கு விளங்கும்:—

இடமயி லன்னசாயல் மடமங்கை தன்கை
யெதிர்நாணி பூண வரையில்
கடும்அயி லம்பு கோத்து எயில்செற் றுகந்து
அமரர்க் களித்த தலைவன்
மடமயில் ஊர்தி தாதையென நின்று
தொண்டர் மனநின்ற மைந்தன் மருவும்
கடமயி லாலநீடு குயில்கூவு சோலை
நறையூரின் நம்ப னவனே

சம்பந்தர்—திருநறையூர்ச் சித்தீச்சரம் - பண் - பியந்தை காந்தாரம்

திரிபுர தகனஞ்செய்து அமரரைக் காத்த பார்வதி சமேதன் மடமயிலூரும் முருகவேள் தந்தை எனத் தகும் என்று குறிப்பிடுவதால் திரிபுரத்தைச் சிவபெருமான் அழித்ததும், கந்தன், சூரபன்பன் சிங்கமுகன் தாருகன் என்னும் மூவரை யொழித்ததும் ஒரு தன்மையனவாம். முப்புர தகனமென்பது மும்மல அழிவென்பர் *திருமூலர். அதுபோல மாயையின் மைந்தரான சூராதி மூவர் முருகவேள் திருக்கரத்தின் தூய கதிர்வேலால் வீட்டப்பட்டதற்கும் உட்கருத்து வேறென்பர் சிலர்.

சுத்த அவத்தையில் தோய்ந்தவர் மும்மல
சத்தசத் தோடத் தனித்தனி பாசமும்
மத்த இருள்சிவ னான கதிராலே
தொத்தற விட்டிடச் சுத்தரா வார்களே

—திருமந்திரம் - 2246

எனத் திருமூலர் கூறியதுபோலச் சூரனாதியோர் கதிர்வேலால் பரிசுத்தமானாரென்பது திண்ணம். முருகவேளின் திருவுருவத்தை நேரில்நின்று தரிசித்த அன்னோர் மாட்சிமைக்கு ஈடுண்டோ?

முழுமதியன்ன வாறுமுகங்களுமுந்நான்காகும்
விழிகளினருளும்வேலும்வேறுளபடையின்சீரு
மழகியகரமீராறுமணிமணித்தண்டையார்க்குஞ்
செழுமலரடியுங்கண்டானவன்றவஞ்செப்பற்பாற்றோ.

தற்பமதுடையசிந்தைத்தாரகனினையவாற்றாற்
சிற்பரமூர்த்திகொண்ட திருவுருவனைத்துநோக்கி
யற்புதமெய்திநம்மேலமர்செயவந்தானென்றுற்
கற்பனைகடந்தவாதிக்கடவுளேயிவன்கொலென்றான்.

கந்தபுராணம் - தாரகன் வதைப்படலம் - 121,127

எனத் தாரகன் கண்ட முருகவேட் கோலத்தையும், பின்னர்ச் சூரபன்மன்,

முண்டகமலர்ந்ததன்னமூவிருமுகமுங்கண்ணுங்
குண்டலநிரையுஞ்செம்பொன் மவுலியுங்கோலமார்பு
மெண்டருகரமீராறுமிலங்கெழிற்படைகள்யாவுந்
தண்டையுஞ்சிலம்புமார்க்குஞ்சரணமுந்தெரியக்கண்டான்

---

* அப்பணி செஞ்சடை யாதிபு ராதனன்
முப்புரஞ் செற்றன னென்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புர மெய்தமை யாரறி வாரே.

—திருமந்திரம் - 343 -

சூரெனுமவுணர்கோமான்றொல்லைநாளேற்றவாறும்
பாரிடை முடிவின் றாகிப் பல்லுக மிருந்த வாறு
மாரண மறித றேற்று வாறுமா முகத்தெம் மையன்
பேரெழிலுருவ நோக்கிப்பெரும்பயன்கோடற்கேயோ

பூவுல கண்ட மெல்லாம் புரந்திடுஞ் சூரன் றன்னைத்
தீவினை யாள னென்றே செப்புவர் சிறப்பின் மிக்க
மூவிரு முகத்து வள்ளல் முன்னர்வந்தெய்தப்பெற்று
ளுவிவன்றவத்திற்கன்றியறத்திற்குமுதல்வனன்றே.

இன்னமு முனிவர் தேவர் யாவரு மினைய னென்றே
யுன்னருந்தலைமைத் தாகு மொருதனிக் குமரன்றன்னைத்
தன்னிரு விழியாற் கண்டான் றனவர்க் கிறைவ னென்று
லன்னவன் றவத்தின் பேற்றை யாரறிந் துரைக்கப் பாலார்

[கந்தபுராணம்—இரண்டாநாட் சூரபன்மன் யுத்தப்பட
லம் - 235, 236, 238, 239]

சூராபன்மன் இவ்வாறு கண்ணுரப் போர்க்களத்தில் நேரிற்கண்ட காட்சி என்ன அற்புதம்! இதுதான் எவ்வகைத் தவத்தின்பயன்? இருவரும் ஒரு சமமாய் விற்போர் செய்யவும் முருகக்கடவுளின் சந்நிதானத்தில் தன்சிவாஸ்திரம்முதலியன பயனற்றுப்போகவும் கண்ட சூரபன்மன், "ஆ! ஆ! இத்தகைய வீரனல்லவோ எனக்குத்தகுந்த எதிரி; அன்னோனுக்கும் என்னினும் சிறந்தவனிடம் போர்வாய்க்க இயலாது" என்று வியந்து ஆயுதமெடாமல், முருகவேளின் திருவுருத்தைத் தரிசித்தவாறு நின்றான். சரவணபவன் சூரனை நோக்கி, "ஏ சூரா உனது அஸ்திரங்கள் பயனற்றுப் போய் நீ நிராயுதனுய் நிற்கும்போது எனது வேலாயுதத்தை உன்மீது பிரயோகிக்சமனமில்லை. அவ்வாறு செய்தால் அது தர்மயுத்தமாகாது; ஆதலால் நீஇன்று போய் நாளை வேறுபடைக்கலங்களுடன் வந்து போர் செய்து பார்" என்று விடைகொடுத்துஅனுப்பிய அம்முறையையே, யுத்தத்தில், இராமனும் அர்ச்சுனனுங் கடைப்பிடித்து ஒழுகினர்.

இதுகாறும் செய்த துஷ்டச்செயல்கள் போகட்டும். இனியாகிலும் நற்புத்தியால் உய்யக்கடவ னென்னும் திருக்கருணையின் மாட்சிமையால், போர்க்களத்திலிருந்து மாயம்புரிந்து மறைந்து தன் அரண்மனை சென்ற சூரன்மீது கந்தவேள் தனது செவ்வேலை எறியவில்லை. அச்செய்தி பின்வருஞ் செய்யுளில் தெரிகிறது.

மறைந்து போயசூர் முயற்சியை மன்னுயிர் தோறு
முறைந்த நாயகன் கண்டன னொருதனிச் செவ்வே
லெறிந்து மற்றவ னுயிர்கொள நினைந்தில னின்னு
மறிந்து தீயவ னுய்யுமோ வெனுந்திரு வருளால்
—இரண்டாநாட் சூரபன்மன் யுத்தப் படலம் - 326.

அளவற்ற சக்தி பெறுவது ஆச்சரியமன்று; அதற்குத் துணையாக அத்துணை கருணையும் பொறுமையும் பெற்றிருப்பதே பெருங் காப்பியத்தலைவனுக்கு இன்றியமையாத குணமாகும். பெருங் காப்பியத்தலைவன் எல்லாச் சக்திகளையும் அழிக்கும் யந்திரமல்லன். எல்லாச்சக்திகளையும் பயன்படுத்தவல்ல தந்திரமுள்ள இனிய அழகிய மைந்தனும் அநந்த கல்யாணகுணங்கள் வாய்ந்தவனுமாம். சூரனை ஆட்சி கொண்டனரேயன்றி அந்தத்தில் முருகவேள் அவனை உண்மையில்அழிக்கவில்லை. அவனைத் தன் பிரியமானவாகனமாகவும்,கொடியாகவும் கொண்டது எத்துணை பெரிய அருள் வெள்ளமோ! சிவபெருமான் எயிலை அட்டதும் மலைமகளாகிய மடமயிலை * மணந்ததும், முருகக்கடவுள் சூராதிகளை யொழித்ததும் மடமயி லூர்ந்ததும் சீர்தூக்கில்யாதுமிகச் சிறந்ததெனக் கூறலாகாது. "பொன்னுளைமயிலூர்தி முருகவேள்தாதை" யென்று நம் சமய குரவர் சிவபெருமானைப் பாடியது இக்கருணை வெள்ளங் கண்டேயாம்:—

தழைமயி லேறவன் தாதை யோதான்
மழைபொழி சடையவன் மன்னு காதில்
குழையது விலங்கிய கோல மார்பின்
இழையவன் இராமன தீச்சரமே.
சம்பந்தர் - திருவிராமன தீச்சரம் - பண் - வியாழக்
குறிஞ்சி 3.

இத் திருக் கோலத்தின் அழகு, சிரிய வரம்பெற்ற சூரபன்மனே கண்டு வியக்கத்தக்கதாகும். அதனைக் கச்சியப்ப சிவாசாரியர்,

ஆயிர கோடி காம
ரழகெலாந் திரண்டொன் றாகி
மேயின வெனினுஞ் செவ்வேள்
விமலமாஞ் சரணந் தன்னிற்
றாயகல் லெழிலுக் காற்றா
தென்றிடி னினைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லா
முவமையார் வகுக்க வல்லார்

அண்ணலார் குமரன் மேனி
யடிமுதன் முடியின் காறு
மெண்ணிலா வூழி கால
மெத்திற நோக்கி னுலுங்
கண்ணினு லடங்கா தன்னிற்
கருத்தினு லடங்கா தென்பா
னண்ணினு னமருக் கென்கை
யருளென நாட்ட லாமே.
கந்தபுராணம்-சூரபன்மன் வதைப்படலம் - 439, 331.

முருகக் கடவுள் எடுத்த பெருங்கோலத்தைச் சூரபன்மன் கண்டு மிகவும் வியந்தவனாய்ச் சீற்றம் முழுவதும் அகற்றினன் - அவன் உரோமங்கள் சிலிர்த்தன; கண்களில் தூய்மையான நீர்ததும்பியது; மனம் உருகியது.

போயின வகந்தை போதம்
புகுந்தன வலத்த தான
தூயதோர் தோளுங் கண்ணுந்
துடித்தன புவன மெங்கு
மேயின பொருள்கண் முற்றும்
வெளிப்படுகின்ற விண்ணோர்
நாயகன் வடிவங் கண்டே
னற்றவப் பயனீ தன்றோ

என்றனன். "காரண்டமழைபோலக் கண்ணீர்சோரக் கன்மனமே நன்மனமாக்கரையப்" பெற்றனன். இனி

* நாகத்தை நங்கை யஞ்ச நங்கையை மஞ்ஞை யென்று
வேகத்தைத் தவிர நாகம்; வேழத்தி னுரிவை போர்த்துப்
பாகத்தி னிமிர்தல் செய்யாத் திங்களை மின்னென் றஞ்சி
ஆகத்திற் கிடந்த நாக மடங்குமா ரூர னார்க்கே.
அப்பர் - திருவாரூர்-திருநேரிசை.

கிடந்தபாம் பருகுகண் டரிவை பேதுறக்
கிடந்தபாம் பவளையோர் மயிலென் றையுறக்
கிடந்தநீர்ச் சடைமிசை பிறையு மேங்கவே
கிடந்துதா னகுதலைக் கெடில வாணரே.
—அப்பர் - திருக்கெடிலவாணர்- காந்தார பஞ்சமம் 8.



மானம்லென்றே சூரன்சரணாகதிஅடைதலைத்தடுத்தது. ஆயினும் இவ்வாணவத்தால் போர்செய்து மயிலும் சேவலு மாயினான். தன் வேலாயுதத்தால் இருகூறான சூரபன்பன்மீது முருகக்கடவுளுக்கு யாதொரு கோபமுமில்லை.

தீயவை புரிந்தோ ரேனுங்
குமரவே டிருமு னுற்றாற்
றாயவ ராகி மேலைத்
தொல்கதி யடைவ ரென்கை
யாயவும் வேண்டுங் கொல்லோ
வடுசம ரிந்நாட் செய்த
மாயையின் மகனு மன்றோ
வரம்பிலா வருள்பெற் றுய்ந்தான்

அத்தோகைமஞ்ஞை ஞானக்கண் பெற்றதால் தன்னைச் சுமக்கத்தக்க வூர்திபாக்கிக் கோழியைக் கந்தவேள் தனது தேரின்மீது நின்று ஆரவாரிக்க விடுத்தனர். தியோரை அழிக்கஎண்ணாது அவர்களைச்சீர்திருத்துவதே தன் தொழிலாகிப் "போயோ டாடி"யாய்த் திரியும் பிஞ்ஞகன் புதல்வனும், தன்னைப் பகைத்துச் சமர்செய்த சூரனையும் மயிலும் சேவலுமாய்த் தன்னிடம் அமைத்தது இரும்பைப்பொன்னாக்கும்இரசவாதத்திற் கொத்ததேயாகும். இதுவே "காதலாற் கடற்சூர் தடிந்திட்ட" என்னும் வன்றொண்டர் தொடர்மொழியின் கருத்தென அனுமானிக்கலாம்.

## (b) அகப்பொருளொழுக்கம்

இதுகாறும் புறப்பொருள் ஒழுக்கத்தில் முருகவேள் "தன்னிகரில்லாத் தலைவ" னென்பதைக் கண்டோம். இனி நமது சமய குரவர்கள், அகப்பொருள் ஒழுக்கத்திலும் கந்தவேள் அன்னவனே என்பதைக் காணலாம். அகப்பொருளில் களவியற்றுறைகளுக்கு இடமாவது பெரும்பாலும் குறிஞ்சி நிலமாம். அதற்குச் சேர்ந்தன் வழிபடு கடவுளாகி நிற்கின்றான்.

குறவிதோள் மணந்த செல்வக்
குமரவேள் தாதை யென்று
நறவிற நறுமென் கூந்தல்
நங்கையோர் பாகத் தானைப்
பிறவியை மாற்று வானைப்
பெருவேளூர் பேணி னானை
உறவினல் வல்ல னாகி
யுணருமா றுணர்த்து வேனே.
—திருப்பெருவேளூர் - திருநேரிசை - 4.

என்னும் அப்பர் திருப்பாசுரத்தின்படி வள்ளியை மணந்த முருகர், மலைமகளைமணந்த அவர் தாதைக்கு ஒப்பாவர். இமயமலையும் குறிஞ்சியே. அமமலையரையன்மகளும் வள்ளிபோன்ற பச்சைக்கிளியன்னசாயலையுடையவளே. மலையில்பார்வதிதேவியின் தவத்தைக் காணச் சிவபெருமான் சென்று அவளைச் சோதித்ததும், பிறகு தன் திருக்கோலத்தை உள்ளபடிகாட்டித் திருமணம் புணர்ந்ததும் முருகக்கடவுள் வள்ளியம்மை தினைப்புனத் திருக்கையில்வாட்டி மயக்கிப் பிறகு தன்னுருவம் காட்டியதும் களவியலிலக்கணமேயாம். பிறகு எல்லா உத்தம நாயகர் நாயகிகள் களவொழுக்கமும் இவ்வழிப்பட்டதென்றே நமது இலக்கணங்களும் கூறுமன்றே. ஐயம்என்னும் துறையில் உத்தம நாயகனைக் கண்ட நாயகி இவன் முருகவேளோ என்னல் பொருளிலக்கண வாய்பாடுகளில் ஒன்றாய் இதுகாறும் நின்றுவருகின்றது.

சிவபெருமானைக் குமரவேள் தாதையென்றது, அக்களவியலில் அவருக்கு மெய்யுறு புணர்ச்சி கூறுவது இன்மையாலும், கடவுளர்க்குரியபுணர்ச்சியாகிய உள்ளப்புணர்ச்சியே கூறப்படுதலாலும், முருகவேள் தினைப்புலத்தில் வள்ளியைமருவியது உள்ளபுணர்ச்சி மாத்திரமாகாமல் மெய்யுறு புணர்ச்சியுமாதலாலும், சிவபெருமான் பார்வதிதேவியார் ஒழுக்கம் இதி லுயர்ந்ததென்பது பெற்றாம். மனிதவுருவத்துடன் குறவர்களின்செயற்கைத்தன்மைகளமைந்துஉலாவியவள்ளிதேவியாருடன் மருவுதற் கவாவித் தணிகைமன்னன் "கன்று காமநோய் கவலையுள் வைத்தனன்" என்றார் கச்சியப்ப சிவாசாரியார். காமதகனஞ் செய்த சிவபெருமான் பார்வதிதேவியாரை மருவுதற்குக் காமநோய் யாதும் பெற்றா ரல்லர். ஆதலால் சிவபெருமான்-பார்வதியார் திருமணம், முருகர் - வள்ளி திருமணத்தினுஞ் சற்றுச் சிறப்பாதலால் இவர்அவர் தாதையென்பது பொருந்தும் போலும்.

சிவபெருமானே முருகவேளாயின், கந்தருக்குக் காமநோய் அமையப்பெறுமோவெனின், அது அவர் திருவிளையாடலில் ஒன்றென்றும், வள்ளிநாயகியார் மானிடப்பிறவியில் அமைந்து இழிகுலத்தோருடன் சேர்ந்து அவர் மகள்போல் ஒழுகிவந்ததால் முதலில் மெய்யுறு புணர்ச்சிகளிலும், திருமணம் புணர்ந்தபின்னர்த் தேவியார் பழைய சுந்தரிஉருவம் பெறவே கடவுளர் புணர்ச்சியான உள்ளப்புணர்ச்சியிலும் அமைந்தொழுகலாயினர். சுப்பிரமணியக்கடவுளும் வள்ளியம்மையும்குறிச்சியில் ஒருவரையொருவர்நெருங்கியவுடன்,

அன்னதோர்வேலைதன்னி லறுமுகமுடையவள்ள
றன்னுழையிருந்தநங்கைதனையருளோடுநோக்கக்
கொன்னவில்குறவர்மாதர் குயிற்றியகோலநீங்கி
முன்னுறுதெய்வக்கோல முழுதோருங்குற்றதன்றே.
—வள்ளியம்மை திருமணப்படலம் - 195.

தெய்வயானையம்மையின் தோளினைமணந்தாரென்பது கந்தருக்கு அத்துணைச் சிறப்பன்று. தமிழ் வழங்குமிந் நாட்டில் நமது இலக்கியஇலக்கணத் தலைமைப் புலவரான சரவணப்பெருமான் அகப்பொருட்டுறையை நடத்திக் காட்டினுரென்பதே மிக்க சிறப்பென்று எண்ணி நமது சமயகுரவர் "வள்ளிமணாள"னென்னுமடைமொழிகளை ஒப்பிலாமணியாகிய தணிகைமணிக்குத் தொடுத்தார் போலும்.

ஏமாங்கதத் திளவரசன்
ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,
எழுதியவோர்
செந்தமிழ்க்காதை.
கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தாகாண்டம்—2. அநுமப் படலம்

[158-வது பக்கத் தொடர்ச்சி]

போய்மையும் நலமெனப் புகல வோண்ணுமோ.

தந்தை உணர்த்தியிருந்த குறிப்பாலும் தடக்கையிலுந் தாளிலும் சங்குசக்கரக் குறிகள் தான்கண்ட காட்சியாலும் இவ்விராமன் செங்கண் அத்திரு நெடுமாலே என்பதைச் சங்கையற அறிந்தவவ் வனுமன் பின்னர், "யாரென விளம்புகேன் நான் எங்குலத் தலைவற் கும்மை வீர, நீர் பணித்திர்" என்னக் கேட்டது வஞ்சனையல்லாக்கால் பயனில் வினவே ஆதல்வேண்டுமென மேற்பார்வைக்குத் தோன்றுகின்றது. அல்லது, "மும்மை ஏ ழுலகங்காக்கும் முதல்வர் நீர், என்பது உணர்ந்தேன். ஆயினும் இம் மனிதவுருவத்தில் நீவிர் யாவர் என்று நான் என் தலைவனுக்குஉரைப்பது, அதனையும் செப்பியருள்வீர்" என இது பொருள் படலாமாயினும், மெய்ம்மையின்வேலிபோல்வான்என்னும் அடைமொழிகளால் அனுமன் இவ்வயின் குறிக்கப்பெற்று நிற்றலால், இவன் "யாரென விளம்புகேன், பணித்திர்" என வினவியது சற்றே ஆழ்ந்ததோர் குறிப்பினை உட்கொண்டிருத்தல் வேண்டும் என்பதில் ஐயமில்லை. "பெரும, நீ ஆதியாய பரமனென்பதை நான் நன்கறிவேன். அதனை நான் சுக்கிரீவனிடத்தில் நேரே இயம்பிவிட வேண்டுமென்பது உன் கருத்தோ. மற்று, இதனை இயம்பாமல் மறைத்துவைத்து வேறு ஏதேனும் விளம்பவேண்டும் என்பது உன் திருவுளமோ. வாய்மையைவிட்டுப் பொய்யை உரைத்தலே இப்பொழுது புரைதீர்ந்த நன்மை பயக்கும் என நினைத்தனையாயின், பணித்தி, அன்னபடி செய்வேன்" என்று அனுமன் கூறினனெனக் கொள்ளுதல் அமையும். இப்பொருளே முறைமை என்பதற்கு, இச்செய்யுளில் பயிலப் பெற்றிருக்கின்ற, 'விளம்புகேன்,' 'பணித்திர்' என்னும் அவ்விரு சொற்களும் ஆதாரமாகின்றன.

ஓரே பொருளுடையனபோல் வழங்கிவருகின்ற சொற்களிடையேயும் நுண்ணிய வேற்றுமை இல்லாமல் இல்லை. இயம்புதல் உரைத்தல் விளம்புதல் என்னும் இம்மூன்று சொற்களும் உற்று நோக்கின் முற்றிலும் ஒரு பொருளன அல்ல. கூறினவன் இவன் என்று, கூறினவனைச் சிறப்பாக மனத்தில் வைத்துப் பேசுமிடத்தில், இயம்புதல் என்னும் சொல் இயற்கையாக அமையும். இன்னவிடயம் பேசப்பட்டது என விடயத்தைச் சிறப்பாக மனத்தில் வைத்துக் கூறுமிடத்து உரைத்தல் என்னுஞ்சொல் இயற்கையாக அமையும். இனி, இன்னவனுக்கு உரைக்கப்பட்டது, எனக் கேட்பவனைச் சிறப்பாக வைத்துப் பேசுமிடத்து விளம்புதல் என்னும் சொல் இயற்கையா யமையும். இம்மூன்றுசொற்களில்இக்கட்டுரையின் பொருட்டுஇங்குச் சிறப்பாகக்கருதநிற்பது 'விளம்புதல்' என்னுஞ் சொல். இதனை நேருறப் பயிலவல்ல வாசகங்களை ஆழ்ந்து ஆராயுங்கால், சொல்லப்படும் விடயம் கேட்பவனுக்கு எத்தகைய நினைவினை விளைவிக்கவேண்டும் என்னும் கருத்து அதனுள் கலந்திருக்கின்றதென்பது தெரியவரும். உண்மை ஒன்றாக அதனைச் சிறிதும் பெரிதும் வேறுபட மாற்றிக் கேட்போன் மனது கூறுவோன் கோரியபடி இயங்குமாறு நவில்கின்ற தன்மையே விளம்புதல் என்னப்படும். வியாபார 'விளம்பரங்கள்' இப்பொருளை ஐயமில்லாவகையில் காட்டித்தருகின்றன. சரக்கின் தன்மையையும் நன்மையையும் உரைக்கின்ற கருத்தோடு அல்லாமல், அதனை வாங்கவேண்டியவர்கள் எவ்வாறு ஏற்றுக்கொள்ளல்வேண்டும் என்பதைக்கருதியே நடைபெறுகின்றனவாதலின் 'விளம்பரங்கள்' என்று அவைகளை அழைப்பது தக்கதேயாகின்றது. ஆதலின், "கேட்பதற்கு இருக்கும் சுக்கிரீவனுக்கு என்ன பொருள்படும்படி யான் பேசுதல்வேண்டுமென ஐயனே, நீ விரும்புகின்றாய்" என்னும் குறிப்புத் தோன்றவே, "யாரென விளம்புகேன் நான் எங்குலத் தலைவற்கு உம்மை" என்று அனுமன் வினவினான் எனக்கொள்ளுதல் சாலப்பொருந்தும். "யாரென விளம்புகேன்" என்று இராமனை இங்கு வினவிய மாருதி, பின்னர்ச் சுக்கிரீவன்பால் சொல்லிமுடிக்கும்போது, மீண்டும், "எனையரென்று உரைசெய்கேன் இரவிதன் சிறுவனே" என்றே குறைசில இருப்பதைக்குறிக்கின்றான். இராமனை வினவியபோது, தான்கொண்டுசெல்லும் வதந்தியைக் கேட்பதற்கிருந்த சுக்கிரீவனைச் சிறப்புறத் தன் நினைவில் வைத்து 'விளம்புகேன்' என்னுஞ் சொல்லையும், சுக்கிரீவன்பால் மொழிந்தபின் எஞ்சியது தன் கூற்றிற்கு விடயமான இராமனேயாதலால், "உரைசெய்கேன்" என்ற சொல்லையும் அனுமன் பயின்றது, முன் காட்டியபடி இச்சொற்களுக்கிடையே யுள்ள பொருள் வேறுபாட்டின் தன்மையைச் செவ்விதின் வெளிப்படுத்துகிறது. 'விளம்புகேன்' என்ற சொல்லை அச் சிறப்புப்பொருளில் பயின்றனன் அனுமான் என்பதற்குச் சார்பாகப் "பணித்திர்" என்ற சொல்லும் அமைந்திருக்கின்றது. "நான் அறிந்ததையறிந்தபடி உரைக்கலாகாதாயின், நும்மைப்பற்றி யான் எவ்வாறு திரித்து உரைத்தல் வேண்டுமென்றுவிரும்புகின்றீர்களோ அதனைஎனக்குக்கட்டளையிடுங்கள், அவ்வாறே சென்று யான் எங்குலத் தலைவன்பால் விளம்புவேன்" என்னும் குறிப்புடைய நுட்பத்தைப் "பணித்திர்' என்னுஞ் சொல்லினுள் காணலாம். எனின், தன்னெஞ்சு அறிவது பொய்ப்பதற்கு அனுமன் ஆயத்தமாயிருக்கின்றானென்னுஞ் செய்தி தெரிகின்றது. அனுமனும் பொய்சொல்ல உடன்படுவானோ என்னுமோர் வியப்பு விளையுமளவில், இவனையோ "மெய்ம்மையின் வேலிபோல்வான்" என்று கம்பர் அழைப்பதற்கு இசைந்தார் என்னும் வேறோர் வியப்பு அதனினும் அதிகமாக விஞ்சி எழுதல் இயற்கையே. ஒன்று நிச்சயம்; பயிரையே அழிக்கப்புக்க வேலியோ அல்லன் இவ்வனுமன். மெய்ம்மையின் இலக்கணமனைத்தையும் இவன் கலக்கமின்றிக் கண்டிருந்தவனாதலாற்றான், உண்மையை உணர்ந்த பின்னும் அதனை வேறுவகை விளம்பினும் வாய்மையினின்று பிறழ்ந்தபடி யாகாதென்பதைத் தேர்ந்து இவ்வண்ணம் இராமனை வினவுந் துணிந்தான். இல்லையேல் மெய்ப்பொருளை நோக்கி, "ஏ மெய்ப்பொருளே, உன்னைப்பற்றி யான் என்ன என்ன பொய்கள் விளம்பவேண்டும், அதனை உரை" எனக் கேட்பது அனுமனுக்கு எவ்வகையிலேனும் ஏற்றதாமோ! கல்வியின் எல்லையையும் அறிவின் ஆழத்தையும், சொற்களின் நுட்பத்தையும்



ஐயமறக்கண்டிருக்கும் ஒருவனேதான், "மும்மையேழ் உலகங் காக்கும் முதல்வர் நீர்" என்று செப்பிய நாமடங்காமுன், "யாரென விளம்புகேன் நான் எங்குலத் தலைவற்கு உம்மை, வீர நீர் பணித்திர்" என்று வினவவல்ல சிறப்புடையோனாவான். இந்தச்சொல் அனுமனது வாய்நின்று வந்தபின், "யார் கொல் இச் சொல்லின்செல்வன்" என்றுஇராமன் வியந்திருப்பானாயின் அது தகும். இம்மொழியினைக் கேட்டபின், "இல்லாத உலகத்தெங்கும் ஈங்கிவன் இசைகள் கூரக் கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னுங் காட்சி, சொல்லாலே தோன்றிற்றன்றே" என இராமபிரான் மகிழ்ந்திருப்பானாயின் அது தகும். இதனைக் கேட்டபிறகு, "இம்மாணியின் மொழிக்கெதிர் முதல்வராய பெற்றியர் மூவர்க்கேயும் பேராற்றலரிது" எனத் தன் தம்பிக்குச் சொல்லியிருப்பானாயின் அன்னவன் அதனை நம்பியிருத்தலுந் தகும். இனி, இச்செவ்வியில் கருதற்கு உரியன வேறுமூன்று சொற்கள் உள.

உண்மை வாய்மை மெய்மை என்னும் இம்மூன்று சொற்களால் குறிக்கப்படும் செய்திகளுக்குஇடையே கிடக்கின்ற வேற்றுமை மிகவும் நுட்பமானது. இருக்கின்றவொன்றைஅதுஇருக்கின்றவாறேகூறுதல்உண்மையாம்; இருப்பது ஒன்றாக அதனைத் தான் வேறு எதுவென்றுஒருவன் எண்ணுகின்றானோ, அவ்வாறு அவன் நெஞ்சு எண்ணியபடியே கூறுவது வாய்மையாம். தன்னெஞ்சு அறிவது பொய்யாமை வாய்மை எனப்படும். இந்தஇலக்கணத்தின்படி சிந்திக்குமிடத்து, உண்மையானதொன்று வாய்மையாகாமலிருக்கலாம். வாய்மையானதொன்றும் உண்மையாகாமலிருக்கலாம். இருட்டிற் செல்வான் ஒருவன் தன்னுடன் வரும் மற்றவனுக்கு, வழியிற் கிடக்கின்ற ஒரு கயிற்றைக் காட்டி, அது கயிறு என்று அறிந்து 'இது ஒரு கயிறு' என்று செப்புங்கால், அக்கூற்று உண்மையும் ஆகும் வாய்மையும் ஆகும். ஏனெனில் அங்கு இருப்பதும் கயிறு, அதனை இவன் கயிறே என்றும் அறிந்தான், அறிந்த அதனை அறிந்தபடியேயுங் கூறினான். மற்று, கிடப்பது கயிறேயாக, அதனை இவன் பாம்பு என்று எண்ணி, "இது ஒரு பாம்பு" என்பானாயின், இவன் கூறியது வாய்மை ஆகின்றது எனினும் உண்மையன்று. இருப்பது கயிறாக, அதனை இருக்கின்றபடியே கூறாமல் வேறு ஒன்றாகக் கூறியபடியால் இவனால் இப்பொழுது உண்மை கூறப்படவில்லை. ஆயினும், அவன்மனம் அந்தக்கயிற்றினைப் பாம்பு என்று எண்ணியது; தான் அறிந்து எண்ணியதை எண்ணியபடியேகூறினான்ஆதலின், அவனைப் பொய்யன்என்று கருதஇயலாது. அவன் கூறியது உண்மையல்லாவிடினும், அவன் வாய்மையே பேசினான். இனி, கிடப்பது கயிறென்று அறிந்து தன்னுடன் வருபவனுக்கு அச்சம் விளைவிக்கும் கருத்தினனாய், "இது ஒரு பாம்பு" என்பானாயின், அக்கூற்று உண்மையும் அன்று, வாய்மையும் அன்று; அது பாம்பன்றிக் கயிறே யாதலின் உண்மை ஆவதற்கில்லை; அதனைப் பாம்பென்று இவன் எண்ணவும் இல்லையாதலின் வாய்மையும் ஆகாமை வெளிப்படை. இனி, இவன்கூற்று இன்னொரு வகையும் ஆகலாம். கிடப்பது கயிறு, அதனை இவன் ஒரு பாம்பென்று எண்ணிவிட்டான்; ஆயினும் தன்னுடன் வருமவன் அஞ்சலாகாது என்னுங் கருத்தினால் அவனை நோக்கி 'இது ஒரு கயிறுதான்' என்று கூறவும் நேரலாம். அவ்வாறு நேருங்கால், இக்கூற்றினைஎன்னவென்று கொள்வது? கீழேகிடப்பது கயிறு அதனை இவன் கயிறென்றே கூறவுங் கூறினான், ஆதலின் அக்கூற்று உண்மையே யாயிற்று. ஆயினும், அதனை இவன் பாம்பென்று எண்ணியிருக்க, எண்ணியபடி கூறாமல் வேறொன்று கூறினானாதலின் அது வாய்மையோ அன்று. எனின், இவ்வாறு வாய்மையல்லாததொன்றுஉண்மையாய் அமைதலுங் கூடும்என்பது புலப்படும்.

உண்மை வாய்மை என்னும் இவைகள்தாம்அமைவதற்குரிய இலக்கணம் இன்னதாம். இனி மெய்ம்மையைக் கருதலாம். உண்மை என்பதும் மெய்ம்மை என்பதும் ஒரு பொருளன அல்ல. உண்மை என்பது ஒன்றன் தோற்றம் எவ்வாறுஇருக்கின்றதோ அவ்வாறே அதனைக் கொண்டு விவகரிப்பதாகின்றது. 'இருத்தல்'என்னும்பொருளன்றி அதற்கு வேறு ஒரு பெருமையும் கொடுக்காமலே திருவள்ளுவர் உண்மை என்னுஞ் சொல்லைப் பயிலக் காணலாம்:—

நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும்.

என்னுங் குறளில், 'உண்மை யறிவு' என்பது மெய்யறிவு எனச்சற்றேனும் பொருள்பட மாட்டாமையை எளிதில் உணர்ந்துகொள்ளலாம். 'உண்மை யறிவு' என்பதை இங்கு 'மெய்யறிவு' என மாற்றினால் பிறகு இக்குறளே பொருளற்றுப் போய்விடுகின்றது. எனின், 'உண்மை' என்பதற்கு இங்கு இருத்தல் என்பதொன்றே பொருள். அவ்வாறே—

கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
உண்மையா னுண்டிவ் வுலகு.
கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை.
கரப்பிலார் வையகத் துண்மையாற் கண்ணின்
றிரப்பவர் மேற்கொள் வது.
அரிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான்.
கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்
குயலுண்மை சாற்றுவேன் மன்.

என வரும் இக்குறள்களிலெல்லாம், 'உண்மை' என்னுஞ் சொல் 'இருத்தல்' என்னுமொரு பொருளையே குறித்து நிற்கின்றது. எனின், ஒரு பொருள் அல்லது ஒரு செயல் எவ்வாறு இருக்கின்றதென்று ஒருவனுக்குத் தோன்றுகின்றதோ அவன் வரையில் அத்தோற்றமே அவனுக்கு அதன் உண்மையாகும். ஆதலின், உண்மையெனப்படுவது காண்போனைச்சார்ந்து நிகழ்கின்றதோர் சொல். இதனெதிர், காண்போனுக்குத் தோன்றுகின்றதோற்றத்தைப்பற்றிச் சிந்தியாமல்ஒரு பொருள் தனக்கேயுரிய தனித் தன்மையால் குறித்து நிற்கின்ற நிலை அதன் மெய்ம்மையாம். இதனால், உண்மை என்று உணரமாட்டாததொன்று மெய்ம்மையேயாய் அமைதல் கூடுமென்பது விளங்கும். கடவுள் அன்னதோர் பொருள். ஆதலாற்றான், உண்மைப்பொருள் என்னாமல் 'மெய்ப்பொருள்' என்னும் வழக்கே கடவுளுக்கு வாய்த்திருக்கின்றது. "ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே மெய்யுணர் வில்லாதவர்க்கு" என வருங் குறளில், ஒரு பொருளின் தோற்றத்தினின்று வேறுய வோர் தன்மையை உணர்தலே 'மெய்யுணர்வு' எனப்பிரித்துக்காட்டியிருத்தல்இங்குக்

Ta
m 211, N28 N
N34:2.11
199161

கருத்திற் கொளல்வேண்டும். இதன்மேல், அனுமன்றன் செய்தியின் அமைதி நோக்கலாம்.

இராம இலக்குமணர்கள் வில்லொடு வந்து அனுமனெதிர் வீரர்களாய் நின்றது அவன் அவர்களைப்பற்றிக் கண்ட உண்மையாம். எனினும், மும்மை யேழ் உலகங் காக்கும் முழுமுதற்பொருள்என்பது மெய்ம்மை. அதனையும்அவன் யாதும்மயக்கமின்றிஉணர்ந்துகொண்டான். உணர்ந்துகொண்டு, "நான் கண்ட உண்மையைஉரைப்பதோ, அல்லது, யானுணர்ந்த மெய்ம்மையைப்பகர்வதோ, யாதோஇந்நிலைக்குத்தகும், பணித்திர்" என்று வினவுகின்றான். மெய்ம்மையைஉணர்ந்திருந்தும் வேறொன்று விளம்பினால் அது மெய்யைச் சிதைவித்த தாகாதோ வென்று எழவல்லவோர் சங்கையைத் தீர்ப்பதற்குத்தான் கம்பர் அவனை 'மெய்ம்மையின் வேலி போல்வான்" என அழைக்க விரைகின்றார். ஏனெனில், உண்மையைச் செலுத்துவதோடு வாய்மையின் வாரமெல்லாந் தீர்ந்துவிடுகின்றது. மற்று, விளம்பரம் செய்யும் வகை எதுவாயினும் அதனால் மெய்ம்மைக்கு என்றும் அழிவில்லை. எனினும், மெய்ம்மையை இயம்பாமல் உண்மையை விளம்புவதே ஒவ்வொருவேளை நன்மையும் ஆகலாம். மனையின்மாட்சியை அழித்து இழிந்த மாதவப்பன்னி அகலிகை என்பாள், தன் நயனவேல் பாய்ச்சிப் பாய்ச்சி மன்மதன் சரங்களுக்கு இந்திரனது மருமத்தில் வழியுண்டாக்கிப் பின்னர் அவனுடன் காமப் புதுமண மதுவின்தேறல்லுக்கவுண்டிருந்தபோது விளைவதுயாதெனஉணர்ந்தனளாகியும் தக்கதன்றென்ன ஓராத் தாழ்ந்து விலைமகள் அனைய நீரளாயினும், அன்னவளைப் பிற்றைநாள், கோதமன் கையில் ஈந்தகோசிகன், "நெஞ்சினால்பிழைப்பிலாதாளைஅழைத்திடுக" என்னத் தான் அறிந்திருந்ததற்கெல்லாம் மாறாகப் பேசியதுகேட்டு, கஞ்சமாமுனிவன்அன்ன அக்கோதமன் கருத்திற்கொண்டதும், அன்னதே யாதல்வேண்டும். நெஞ்சினால் பிழைப்பிலாதாள்போல்அகலிகை உலகத்திற்குத்தோன்றினாள். ஆதலின் அது உண்மை. ஆயினும் கோசிகன் அறிந்தபடி மெய்ம்மை வேறு. மற்று, மெய்ம்மையை மறைத்து உண்மையை உரைத்தலே அங்கு உறத் தரும் என்று கோசிகன் எண்ணினான். அன்னதோர் நிலையிற்றான் அனுமனும் இங்கு இன்னவாறு வினவுகின்றனன்.

இச்செவ்வியில் ஒரு ஐயம் எய்துவதுஇயற்கையே. மெய்ம்மைதான் யாதென் றுணர்ந்திருக்கின்றஅநுமன், 'உண்மையைஉரைக்கவோ' என்று கேட்டானேயாயினும், தன்னெஞ்சு அறிந்ததற்கு மாறான ஒரு பொய்யைப்புகல இசைந்தது நேரிதோ என்ன வினவலாம். இந்த ஐயம் தெளிவதற்குத் திருவள்ளுவர் வந்து கைதந் துதவவல்லவ ராகின்றார். தானறிந்திருந்த மெய்ம்மைக்கு மாறாக உண்மையே உரைத்தானாலும் அதுவும் வாய்மையின் இலக்கணத்தினின்று பிறழாமல் காக்கப்பெறுவதும் இயலும். "வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றுந் தீமையிலாதசொலல்" என்னுங் கொள்கையோடு, "பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கு மெனின்" என்னுங் கொள்கையையும் கம்பர் ஏற்றுக்கொள்கின்றார் என்பது இதனால் தெரியவருகின்றது. ஆயினும் அக்கொள்கைகளை அப்படியே முழுதும்ஏற்றுக்கொள்கின்றாரோ, அல்லது ஓரளவு எல்லையிட்டு ஏற்றுக்கொள்கின்றாரோஎன்பது சற்றே சிந்தனைக்கு இடமாகியே நிற்கின்றது. உண்மை அல்லதுமெய்ம்மை எதுவோ அதனை அவ்வாறேஇயம்பாமல், வேறுயாதொன்றுந் தீமையிலாத சொல்லல் வாய்மையாகலாம்; புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின் பொய்மையும் வாய்மை இடத்தவாகலாம். மற்று, எது தீமை எது நன்மை என்பதை சிற்றறிவுடைய உயிர்கள் எங்ஙனந் துணிதல்கூடும். இம்மனிதன் நன்மை தீமைகளைப்பற்றித் தான் கொண்ட மதிப்பையே நம்பி, வாய்மையுடன் தன் மனம்போனபடி விளையாடுதல் தக்கதாமோ! மனிதர் தம் மதிப்பின் வண்ணம் நன்மை என்பதும் தீமையென்பதும் எவ்வாறு தோன்றினும் உண்மையில் ஒன்று நன்மையேனுந் தீமையேனும் ஆவது கடவுளிற்கே வெளிச்சம். ஆதலாற்றான், அனுமன் இங்கு அக்கடவுளையே கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுகின்றான் போலும். நன்மைபோல் மேல்பார்வைக்குத் தோன்றுவன சிற்சில அந்தத்தில் புரைதீர்ந்த நன்மை ஆகாமையுங்கூடும். இவ்வாறெல்லாம்விளையவல்ல சங்கைகளைத் தாங்கியே, புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின் பொய்ம்மையும் வாய்மையிடத்தவாகலாமென்று வள்ளுவர் நினைந்து கூறினார் எனக்கொள்ளலும் அமையுமென்பதில் ஐயமில்லை. நன்மைதீமைகளின் நிச்சயம் நம்மனோரால் தேரமாட்டாதவரையில், கடவுளின்சித்தம்எதுவென்றுதோன்றுகின்றதோ, அதுவே தீமை யில்லாததும் புரை தீர்ந்த நன்மை பயப்பதும் ஆகுமென ஒழுகுவது சீரிதாம். "மும்மை ஏழ் உலகங்காக்கும் முதல்வ, யாரென நின்னை விளம்புகேன் யான், பணித்தி" என்ன வினவுங்காலை, அனுமன் அக்கடவுளின் சித்தத்தை யறிந்து, தீமையில்லாத புரைதீர்ந்த நன்மை பயக்கும் வாசகத்தை, அது பொய்ம்மைபோல் தோன்றுமேனும், வாய்மையாக வைத்து வழங்க நினைத்தான் என்பதன்றி வேறன்று. கடவுளையே நேரே கேட்டு அவரது சித்தத்தைத் தெரிந்துகொள்ளவல்ல பாக்கியம் அனுமனைப்போல் எல்லார்க்கும் வாய்க்காதாதலின், தீமையும் புரைதீர்ந்த நன்மையும் சார்கின்றனவென்னும் சூழ்ச்சியால் பொய்ம்மையையும் வாய்மைபோல் வழங்கத் துணிவது ஏனையோர்க்கு அழகன்று. ஆதனில், தன்னெஞ்சறிந்தபடி செப்பும் வாய்மையே கடவுள் சித்தத்தின் மெய்ம்மையும் ஆகும்எனக்கொண்டு விவகரிப்பதல்லால், மனிதருக்கு வேறு நெறி அமைவது இயலாது என்பதை உன்னியே, வாய்மை என்னும் அதிகாரத்தின் ஈற்றில்,

யாமெய்யாக்கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற.

என்னும் திப்பியக் குறளை வைத்துத் திருவள்ளுவர் நேர்மையாகமுடித்திருக்கின்றார். அனுமன், எம்மினும்வேறானசெவ்வி வாய்த்தவனாயிருக்கின்றானாதலின், வாய்மையின்அல்ல பிறவும் அவ்வன்மெய்யாக் காணவல்லவனாதல்பற்றி, 'மெய்ம்மையின் வேலி போல்வான்' என்னும் அடை, பொய்யைப்புகலப் புக்கவிடத்தும், அவனுக்கு அடுக்கும்.

இன்னவாறு மெய்ம்மையின் தத்துவத்தையும், அதனை விளம்பும் நீர்மையையும் செவ்வி தின் உணர்ந்து உறுபொருள் வினவிய அனுமனைச் சொல்லின் செல்வன்என்றும், முதற்றேவர் மூவர்க்கும் எட்டுதற்கரிய ஆற்றலுடையவனென்றும், கலைமுதிர்ந்த மதியினன்என்றும் பாராட்டியதெல்லாம், இவ்வாசகம் நிகழ்ந்தபின் வந்திருக்குமாயின் சாலப் பொருந்துமென்னற் கையமோ சிறிதுமில்லை.



# ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை.

[156-வது பக்கத் தொடர்ச்சி]

## III. ஸ்ரீரங்கநாத ஸ்வாமி ஸ்தோத்திரங்கள்.

1. இராகம்—தோடி] [தாளம்—ரூபகம்.

**பல்லவி**

ராஜு வெடலே ஜூதாமு ராரே கஸ்தூரி ரங்க...................................(ராஜு)

**அநுபல்லவி**

தேஜி னெக்கி ஸாமந்த ராஜுலூடிகமு ஸேய
தேஜரில்லு நவரத்நபு திவ்ய பூஷணமுலி டி ரங்க...................................(ராஜு)

**சரணம்**

காவேரீ தீரமுநநு பாவந மகு ரங்க புரிநி
ஸ்ரீவெலயு சித்ரவீ திலோ வேட்கக ராகா
ஸேவநு கநுஸுருலு விருல சேப்ரேமனு பூஜிம்சக
பாவிம்சு த்யாகராஜு பாடக வைபோக ரங்க...................................(ராஜு)

### பொருள்

தேஜின் எக்கி - குதிரை வாகனத்தின்மீது இவர்ந்துகொண்டு, ஸாமந்த ராஜுலு ஊடிகமு ஸேய - சிற்றரசர்கள் பணிவிடை செய்ய, தேஜரில்லு நவரத்நபு - பிரகாசிக்கும் நவரத்தினங்களாலாகிய, திவ்ய பூஷணமுலிடி - சிறந்த ஆபரணங்களை யணிந்துகொண்டு, கஸ்தூரி ரங்க ராஜு வெடலே - கஸ்தூரிரங்க ராஜன் பவனியாகப் புறப்பட்டார். ஜூதாமு ராரே - தரிசிப்போம், வாருங்கள்.

காவேரீ தீரமுநநு - காவேரி நதி தீரத்தில், பாவநமு அகு ரங்க புரிநி - மகா புண்ணிய க்ஷேத்ரமாக விளங்கும் ஸ்ரீரங்க நகரில், ஸ்ரீவெலயு சித்ரவீதிலோ - லக்ஷ்மீகரம் விளங்கும் சித்திரவீதியில், வேட்கக ராகா - உல்லாஸமாக எழுந்தருள, ஸேவநுகநி - அந்தத் திவ்விய ஸேவையைத் தரிசித்து, ஸுருலு - தேவதைகள், விருலசே - புஷ்பாதிகளால், ப்ரேமதோ பூஜிம்சக - பரம பக்தியுடன் பூஜிக்கவும்; பாவிம்சி த்யாகராஜு பாடக - (எம்பெருமான் குணாதிசயங்களை அறிந்து) தியாகராஜன் கானம் செய்யவும், வைபோக ரங்க ராஜு வெடலே - வைபோக ரங்கராஜன் பவனி புறப்பட்டார். ஜூதாமு ராரே - தரிசிக்கலாம், வாருங்கள்.

### குறிப்பு

அனுபல்லவியில் "ஸமஸ்த ராஜுலு" என்னும் பாடமுண்டு. அவ்வாறு கொண்டால் "சகல அரசர்களும்" என்று பொருள்கொள்ளவேண்டும். ஸ்ரீ ரங்கநாதனுக்கு, காவேரி ரங்கன், ஸ்தூரி ரங்கன், கல்யாண ரங்கன், மன்னாரு ரங்கன், அழகிய மணவாளன், பரிமள ரங்கன், வைபோக ரங்கன் என்பது போலப் பல திருநாமங்கள் வழங்குகின்றன. இக்கீர்த்தனம்ஸ்ரீரங்கக்ஷேத்திரத்திற்குத் தியாகராஜ ஸ்வாமிகள் எழுந்தருளின காலத்தில் குதிரை வாகன ஸேவையைக் கண்டு வியந்து பாடியவற்றுள் ஒன்று என்று கூறப்படுகின்றது. "விநராதா நாமனவி" என்ற கீர்த்தனமும் குதிரை வாகன சேவையைப் பற்றியதேயாகும். 'தேஜினெக்கி' என்ற தொடரை 'ரங்கராஜு' என்ற சொல்லோடு பொருத்த வேண்டும். சிற்றரசர்களுக்கு விசேஷணமாக அதனைக் கொள்ளப்படாது.

### தோடிராக லக்ஷணம்.

இவ்விராகம் 72 மேளகர்த்தா முறைப்படி 8-வது மேளகர்த்தா. அதன்படி இதன் முழுப்பெயர் ஹநுமதோடி என்பது ஆகும். வெங்கட மகியின் முறைப்படி (தீக்ஷித மதப்படி) இது ஜனதோடி என்று வழங்கப்படும். "கடபயாதி ஸங்க்யா" முறை யென்ற ஓர் குயுக்தியான விபரீதத்தால் இராகங்களுக்கு இப்படிப்பட்ட பெயர் மாறுதல்கள் ஏற்படுத்தப்பட்டன என்பதை மட்டும் இங்குக் கூறுவோம். மற்ற விஷயங்களைக் கொண்டு கண்டனம் செய்ய இது இடமல்ல, ஸமயமுமல்ல. இது சுத்தக் கர்நாடக ராகமல்லவென்றும் ஹிந்துஸ்தானி ஸங்கீதத்திலிருந்து ஸ்வீகரிக்கப் பட்டதென்றும் (அதாவது ஔத்தாராகமென்றும்) சில பெரியோர் அபிப்பிராயம். சாதாரண காந்தார சுத்த மத்யம சுத்ததைவதங்கள் ராகச்சாயா ஸ்வரங்கள். பஞ்சமமில்லாத பல பிரயோகங்கள் இதற்கு விசேஷ ரஞ்சகத்தைக் கொடுக்கின்றன. 'கரிகா' 'மகமா' என்ற பிரயோகங்களில் முறையே ரிஷபமும் காந்தாரமும் அளவில் அதிகப்பட்டுப் பேசுகின்றன என்று சிலர் கூறுகின்றனர். 'தநிரிநித,' 'தகரிநிதம' தக்ரி ஸ்நித, நிக்ரி நிரிநி என்பது முதலான பல பிரயோகங்கள் அழகானவை. மாலையிற் பாடப்பட வேண்டியதென்று சிலர் அபிப்பிராயப்படினும் எப்போதும் பாடத்தகுந்ததே.

ஆரோஹணம்:—ஸரிகமபதநிஸ்
அவரோஹணம்:—ஸ்நிதபமகரிஸ

## ஸ்வர ஸாஹித்யம்

### ஸம்ஜ்ஞா விவரணம்

, — இது ஒரு களையைக் காட்டுகிறது.
; — இது இரண்டு களைகளைக் காட்டுகிறது.
| — இது தாளத்தின் மத்தியிலுள்ள தட்டுக்களைக் குறிப்பிடுகிறது.
|| — இது தாள ஆவர்த்த முடிவைக் காட்டுகிறது.
* — இது பாட்டுத் தொடங்கு மிடத்தைக் குறிப்பிடுகிறது.

ஸரிகம— பாட்டின் நடை எந்தக்காலத்தில் உள்ளதோ அதன் நடுவில் துரிதகால ஸங்கதி வருமிடங்களில் இவ்வாறு கீழ்க்கோடிடப்பட்டிருக்கும்.
ஸரிகம— மேற்படி ஸஞ்ஜையிற் கூறப்பட்டிருக்கும் துரிதகாலத்துக்கும் துரிதமான காலத்தை இந்த இரட்டைக் கீழ்க்கோடு குறிக்கும்.
பதநி—தடித்த எழுத்தில் உள்ள ஸ்வரங்கள் கீழ் ஸ்தாயியைக் குறிப்பிடும்.
ஸ்ரீக்ம்—மேலே புள்ளியுள்ள ஸ்வரங்கள் மேல் ஸ்தாயயைக் குறிப்பிடும்.

[இக்கீர்த்தனத்தை மத்யம காலத்தில் பாடவேண்டும்]

பல்லவி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ; * ஸநி | காரீ காமா | பா; | பா - பமகாரிஸ | ரிநி - ஸநி | காரீ காமா | பாதா | பா -ப மகா ரிஸ |
| ; * ரா | ஜூவெடலே | ஜூ; | . - தா . . . மு | . . -ரா . | ஜூவெடலே | ஜூ. | . -தா . . மு. |
| ரி நி * ஸ நி | கா ரீ கா மா | பதநித | பம- பமகாரிஸ | ரி நி - பா | பா; ; - ப ம | கா ; | மா கா ; - ரி ஸ |
| . . * ரா . | ஜூவெடலே | ஜூ. . . | . . - தா. . மு. | . . -ரா | ரே; ; - கஸ் | தூ ; | ரி ரங் ; - க . |
| ரி நி * ஸ நி | கா ரீ கா மா | ப த நித | பம- பமகாரிஸ | ரி நி - பா | பதநிஸா,-பா | மகபம | தபபம காரிஸ |
| . . * ரா . | ஜூவெடலே | ஜூ. . . | . . - தா. . மு . | . . - ரா | ரே. . . ,-கஸ் | தூ. . . | ரி. ரங் . . க . |

ரி நி *
. . * (ராஜூ வெடலே)

அநுபல்லவி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தா நீ | ஸாநீதாபா | தா தா | நீ நீ ஸா ஸா | ; த த | நீஸா ; ஸா | ஸநிதா | தா - நீ ; ஸா |
| தே . | ஜிநெக்கி | ஸா . | ம . ந் த | ; ரா . | ஜூலூ ; டி | க. மு | லு - ஸே ; ய |
| ப த நிஸ் | ரிஸ்-நிதநிதபம | தாதா | நீ நீ ஸா ஸா | ; த த | நீ ஸா ;ஸா | ஸநிதா | தா - நீ ; ஸா |
| தே. . . | ஜி . -நெ . . .க்கி | ஸா . | ம . ந். த | ; ரா . | ஜூ லூ ; டி | க . மு | லு - ஸே ; ய |
| ப த நி ஸ் | ரிக்-ரிஸ்நிதபம | தாதா | நீ நீ ஸா ஸா | ; த த | நீ ஸா ;ஸா | ஸநி தா | தா -ஸ்ரிரிஸ்நித |
| தே. . . | ஜி. -நெ. . . க்கி. | ஸா . | ம . ந் . த . | ; ரா . | ஜூ லூ;டி | க. மு | லு -ஸே. . . ய. |
| ப ம * தா | தா க்ரி ஸா ஸா | ஸாஸா | ஸ் நிதா நீ ஸா | த நி ஸா | ஸா-ஸ்நிதாதா | நிததப | மகபம-காரிஸ |
| . . * தே | ஜ ரி . . ல்ல | ந வ | ர . . த் நபு | தி . . வ் | ய -பூ . . ஷ | ண.மு. | வி. டி . - ரங்க |

ரி நி *
. . * (ராஜூவெடலே)

சரணம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ; * பா | பா ; பா ; | பா ,ம | தாதா-தாதா | ; - கா | , ம-பா நிதபா | கா , ம | பாகாரீ - ஸரி |
| ; * கா | வே ; ரீ ; | தீ , . | ர மு - நநு | ; - பா | , வ -நம . கு | ரங் , . | க பு ரி - நி . |
| கம * பா | பா ; பா ; | ப த நீ | தாபா- தாதா | ; - கா | , ம -பாநிதபா | கா , ம | பா கா ரீ ஸா |
| . . * கா | வே ; ரீ ; | தீ . . | ர மு - நநு | ; - பா | , வ -ந ம . கு | ரங்க , . | க பு ரி நி |
| ; * ஸநி | கா ரீ கா ; | மா ; | தபம - கா, ரீ | ஸா ; | ஸா ; ஸா ஸா | ஸநிதநி | ஸா ; ; ; |
| ; * ஸ்ரீ. | வெல யு ; | சி த் ; | ர . . - வீ , தி | லோ; | வேட்; க க | ரா. . , | கா ; ; ; |

"ஸேவனு..............வைபோக ரங்க" அனுபல்லவி போல் பாடவேண்டும்.

# தன்னையே நயந்த காதல்

அழகின் விந்தை அந்த நரமாரன். சுருண் டிருண்ட குஞ்சிவந் துலவுந் திரண்ட தோள்களும், கண்ணின் ஒளியைக் கவர்ந்து வீசுங் கண்ணுடிமார்பும், மதியினை நகுமொரு வதனச் செவ்வியும், மெல்லிய நடையும் உடைய இச்செம்மலைச் சேர்ந்ததால் அழகும் ஓர் அழகு பெற்றது. இன்னவன், வரிவளைத் தோளியர் மனத்துட் காமநோய் எரி விளைத்திடுவதோர் பருவமும் எய்தினன்.

கடற்கரை செல்லினும் நகரிடை நடப்பினும், கான் வழி ஏகினும் பொழிலகம் புகினும், மாதரென் றிருந்தோரெல்லாம் நல்லபே ரழகுடைய இந் நரமாரனைத் தொடர்ந்துவந்து சூழ்ந்துகொண்டு, மழையின்றி மண்ணெலாம் வறந்தகாலத்து உண்ணும் நீர் கண்டு வீழ்ந்த உழைக்குலம் என்னத் தம் கண்களால் அவனது ஆன்றபேரெழிலினைப் பருகலாயினர். தம்முடன் பிறந்த மானம் நாணம் நிறை என்னும் நற்பொருளனைத்தையுந் துறந்து இங்ஙனம் இவனைத் தொடர்ந்த மாதர்தம் தொகுதி இவன்ஏகிய இடமெல்லாம்கடலெனப் புரண்டுவரலாயது.

மண்ணக மடந்தையரன்றி,நீரரமகளிரும் கானுறை வனிதையரும் பொன்னகர் நங்கைமாரும், இயக்கர் விஞ்சையர் இனத்து மங்கையரும் இந்நரமாரன்றன் நிகரிலாப் பேரழகிற் குடைந்து, நனவிலும் அவனது திருவமை உருவத்தின் கனவையே காணலாயினர். ஆடவர்தாமும் இவனைக் காணக்காணப் பெண்மையே அவாவினர் என்னின் வேறினி விளம்பல் வேண்டுமோ! விலங்கும் பறவையும் இலங்குமிவன் எழிலில் ஈடுபட்டுத் தம் இயற்கையை மறந்துநிற்கும். நரமாரன் அருகுவருங்கால் மரங்களும் மெய்சிலிர்த்தன.

இன்னவாறு உலகெலா மொருங்குதிரண்டு இவனது அழகினை வியந்தது. வியந்ததன்றியும் மதனனும் விழையத்தக்க அழகினைச் சுமந்திளைத்த மெல்லியமேனி மடமங்கையர், தம்மை அவனுக்கு நல்கி அவனைத் தாம் பெறுமாறு உந்தியதோர் காதலின் ஊக்கமுடையவராகி, நரமாரன் நண்ணிய நெறிதோறும் தத்தம்மை அவன் கண்களுக்குக் காமம் புகட்டும் இலக்காக்கிக்கொள்ள நாணினரல்லர், கூசினரல்லர், அலரெழுமென்ன அஞ்சின ரல்லர்.

எனினும், நல்லபே ரழகுடை நரமாரன், அழகின் பேரெல்லையன்ன வடிவுடைய தையலார்தம்மைச் சிந்தையிற் செங்கணில் இத்தனையும் பார்த்ததில்லை. இவனைத் தொடர்ந்த கட்டழகிகளுள் ஒருத்தியேனும் நர



மாரனது நயனங்களின் எதிர்நோக்கை எய்தினளல்லள். யாரையும் இவன் திரும்பிப் பார்த்ததில்லை. மாதரார் வதன மதிபூத்த செங்கண் பங்கயங்களைத் தன்னுடைய எழிற்கதிரின் திகழொளி குடைந்து மலர்த்திய கொள்கையொன்றும் இவன் அறியான். மலர்ந்த அக்கண்கள்மீண்டும் வண்டெனமாறிஇவன் திருமேனியிலடர்ந்து மொய்த்த பரிசினையும் நரமாரன் சிறிதேனும் அறிந்ததில்லை. அவன்பால்அடைந்த மாதரார் மழைக்கண் பார்வையெல்லாம், பொல்லாத மனைவி புக்கிருந்த இல்லத்து வந்த நல் விருந்தென உலர்ந்துலர்ந்து மீளலாயின.

மற்று, நரமாரனே என் செய்தான்? தன்னுடைய அழகின் மேன்மை தனக்கே தெரிந்ததில்லையோ? தெரியும், தெரியும்!

காலைக் கதிரோன் எழுவதுடன் நரமாரனும் தன் கனவினைக் கலைத்துஎழுவான். எழுந்து அவ்வூரின்கண் அழகிய பொழிலிற் கருகிருந்த வோர் நன்னீர்ப்பொய்கையை நண்ணுவான். நண்ணி, அதன் கரையின்மீது இனிதமர்ந்து பளிங்கெனத் தெளிந்த நீரிலே தன் எழிலமை உருவின் நிழலினைக் கண்வாங்காமல் நண்பகல் காறும் பார்த்திருப்பான்; வைகறைமுதல் நண்பகல் காறும் இவ்வாறு தன் நிழலை நெடிதுபார்த்திருந்த நரமாரன், அந் நண்பகனின்று மலைகாறும் அவ்வாறே பார்த்திருப்பான். இன்னபடியே நாட்கள் நடந்தன, திங்கள் பல கழிந்தன, ஆண்டுகளுந் தொடர்ந்தன. தன்னுடைய நிழலின் அழகிற்குத் தன் உள்ளம் முழுவதையும் அளித்துவிட்டான். தன் னிழலையே காதலித்தான் இக்கழிபே ரழகன். அக் காதலினிடையே மற்றைய வெல்லாம் மறந்தனன்.

தன் நிழலின்பால் வைத்த காதல் அவன் சிந்தையைத்தனையுஞ் சூழ்ந்து வளர்ந்தது. அந்நிழலினைத் தழுவவேண்டும் என்னும் ஆசையை இனி அவனால் தாங்கவோ இயலவில்லை. ஒருநாள் மாலை மலர்மணம் மலிந்த தென்றல் அப்பொய்கையின் கரையைச்சார்ந்து மந்த மந்த நடந்தது. மாங்குயில் கூவின. அந்திவானத்தின் சித்திரப் படாத்தினை அத்தெளிநீர்ப் பொய்கை தன்னுள் காட்டியது. அதனயல் தன் எழிலுடை வடிவ விம்பம் தயங்கக் கண்டான் நரமாரன். துண்ணெனப் பொய்கையுள் பாய்ந்தனன்......அந்தோ! அந்தோ !!

நரமாரன் தன் நல்லுயிரை இன்னவாறு நீத்தபோது அவன் மகிழ்விற் கிடமாயிருந்த அப்பொய்கை, இனிய நீர் இன்மையாகி உவர்க்கின்ற கண்ணீராக மாறியது. பொன்னகர் நங்கைமாரும் வானர மகளிரும் வனத்துறை வனிதையரும் இயக்கர் விஞ்சையர் மாதரும், அப் பொய்கையின் தாபநிலை கண்டு பரிவுற்று அதன் அருந் துயரைச் சிறிது ஆற்றுங் கருத்தினோடு அவ்வயின் நண்ணினர்.

வந்தவர் அப்பொய்கையின் நிலைக்கிரங்கித் தம் கூந்தலை விரித்து அழுதனராய், "பொய்காய், பொய்காய், உன் தண்ணீரெல்லாங் கண்ணீராய் மாறியதே! ஒருதனிப் புலம்பும் ஏழை நீ என்செய்வாய், பாவம். அத்துணை அழகுடையவன் அந் நரமாரன். அவனும் நின்னைக் காதலித்தான்." என இரங்கினர்.

"மற்று, அழகுமிக உடையனோதான் அந்நரமாரன்" என்று கேட்டது அப்பொய்கை.

"நின்னினும் அதனை நன்கு அறியவல்லார் யாரே உளர்? எங்களையோ அவன் எந்நாளும் கண்ணெடுத்துப் பார்த்ததில்லை. மற்று, நின்னையே நாடினன். உன்னருகேநெடிதமர்ந்து நின்னையே நயந்து நோக்கியவண்ணமாய் உவந்திருப்பான். தெள்ளிய நின் நீரின் பளிங்கிற்றுனே அவனழகெலாந் தவழ்ந்தது" என, வந்திருந்த வனிதையர் எதிர்மொழி தந்தனர்.

இது கேட்ட அப்பொய்கை உரைத்தது:—"ஆம், ஆயினும், நான் நரமாரனது அழகினைக் கண்டறியேன். அவன் என் கரையின்மீதமர்ந்து என்னை நோக்கிய போதெல்லாம், அவன் கண்களாம் பளிங்கினில் எப்பொழுதும் என்னுடைய அழகையே கண்டேன், உவந்தேன்; அதனால் நானவனைக் காதலிப்பதாயினேன்."

வந்திருந்த மங்கைநல்லார் பரிவுடன் விந்தைகூரப் பெயர்ந்தனர்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ம.ட. ச்யாவனப்ராசா ம.ட. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. 61. மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
ம.ட. ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசேர்ந்தசிற்றுமணக்கு எண்ணெய் காஸ்ட்ராலகஸ்
ஜவரேக்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

கம்பராமாயணம்:—பதவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு, முதலியவைகளுடன் ஸ்ரீ. வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார், சே. கிருஷ்ணமாசாரியார், வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரவர்களால் பதிப்பிக்கப்பெற்றவை. பால காண்டம் ரூ. 5. அயோத்தியா காண்டம் ரூ. 5. ஆரணிய காண்டம் ரூ. 4. கிஷ்கிந்தா காண்டம் ரூ. 4-8-0. சுந்தர காண்டம் ரூ. 5. யுத்த காண்டம் 2-பாகம் ரூ. 10. தபால் செலவு வேறு.
கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை.

m 21, N 28 k N
N34·2·11
199161

KALANILAYAM
REG. NO. M. 324.

# வர்த்தமானம்

புல் உண்ணும் மக்கள்:—வேலை அகப்படாத துன்பத்தால், தென் அமெரிக்காவிலுள்ள ஸான் மொகரன்ஸோ என்னும் பகுதியில் ஒரு கிராமத்தில் 150 குடும்பத்து மக்கள் வெறும் புல் பூண்டுகளை அவித்து உண்கின்றார்கள். அந்தப் பகுதியில் பலர் பட்டினியால் மாண்டுபோகிறார்களாம்.

*  *  *

சொல்லொன்று செயல் ஒன்று:—வெள்ளைக்கார நாடுகளிலே உலக சமாதானத்தைப் பற்றியும் போர்களை ஒழிப்பது பற்றியும் போர்க் கருவிகள் செய்யக்கூடாது என்பதைப் பற்றியும் பெரும் பேச்சுக்கள் நடக்கின்றன. ஆனால் இங்கிலாந்தில் பதினேழு யுத்தக் கப்பல்கள் புதிதாகச் செய்யப் போகிறார்களாம்.

*  *  *

அர்த்த நாரிப் பிள்ளை:—வடக்கே ஜாம்ஷெட் பூரை அடுத்த சோனூரி கிராமத்தில் ஒரு கூலிக்கார மாது பாதிப் பெண்ணும் பாதி ஆணுமான ஒரு குழந்தையைச் சென்றவாரம் பெற்றாள். அதற்கு இரண்டுதலை நாலு கை, நாலு கால் இருந்ததாம். அது சில மணி நேரம் இருந்து இறந்துவிட்டதாம்.

*  *  *

உடம்பிலிருந்து ஒளி:—ஐரோப்பாவில் ஓரிடத்தில் ஒரு ஸ்திரீயின் உடம்பிலுள்ள (Aura) அவுரா என்னும் ஜோதியின் மூலமாக ஒரு மின்சார பல்பை ஏற்றினார்களாம். அந்தப் பல்பு அந்த அம்மாளுடைய உடம்பிலிருந்து ஒன்றரை கெஜ தூரத்தில் இருந்ததாம்.

நெடுநாள் வாழ வழி:—'நீங்கள் சிரஞ்சீவியாக வாழ வேண்டுமானால், கலியாணமே செய்துகொள்ளாதீர்கள்' என்று கார்டிப் வாசியான பாட்ரிக் ஹில் கூறுகிறார். அவர் கலியாணமாகாதவர். அவர் தமது (சதபூர்த்தி) நூறாவதாண்டு விழாவைச் சென்ற மாதம் கொண்டாடினார். அவர் நூறாவது பிறந்த நாளில் அவர் நண்பர்கள் நூறு மெழுகு வர்த்திகளுடன் ஒரு கேக் பரிசளித்தார்கள். அவர்தான் குடும்பத்தில் இளையவராம். அவர் கூடப்பிறந்த தமக்கை தமயன்மார்கள் இருப்பதும் இறந்ததும் அவருக்குத் தெரியாதாம். ஏனெனில் அவர் இங்கிலாந்தில் பிறந்து ஆஸ்ட்ரேலியாவில் பல்லாண்டுகளாகக் குடியேறியிருக்கிறார். அவர் அதிகாலையில் எழுந்து தமது பசுவைப் பால் கறந்து வீட்டு வேலைகள் அனைத்தையும் தாமே செய்கிறார்.

*  *  *

112 அடிக் கிருபாநிதி:—புத்தமதக் கொள்கைகளை மக்கள் மனத்தில் பதியச்செய்யவும், ஜப்பானியருக்குத் தேசாபிமானம் அதிகரிக்கவும் துணையாய் இருக்க, ஜப்பானில் ஒபூனு எனும் இடத்தில் மிகப் பெரிய உருவச்சிலை யொன்று செய்கிறார்கள். அதற்கு க்வானன் என்று பெயர். தமிழில் கிருபாநிதி என்று அதற்குப் பொருள் கூறலாம். அச்சிலையின் உயரம் 112 அடி ஆகும். 1928-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் அச்சிலையைச் செய்ய ஆரம்பித்தார்கள். இதுவரை முகமும் கழுத்தும் தான் செய்யப்பட்டிருக்கிறது. உடல் செய்வதற்கு இரண்டு லட்சம் டாலர் வசூலித்திருக்கிறார்கள். இவ்வாண்டிற்குள் அச்சிலை முடிவு பெறும். அச்சிலையைச் சுற்றிச் சோலைகள் அமைப்பார்கள்.

*  *  *

எவரெஸ்ட்:—எவரஸ்டு சிகரத்தை சமீபத்தில் சில ஆங்கிலேயர்கள் கண்டுபிடித்து விட்டதாகப் பெருமை பேசிக்கொள்கிறார்கள். ஆனால் அதனை ஆதியில் ஓர் இந்தியரே கண்டு பிடித்தாராம். அவர் வங்காளி பிராமணர். ராதா நாத சிகடார் என்பது அவர் பெயர். அவர் ஸர் ஜார்ஜ் எவரஸ்ட் என்ற பெரிய உத்யோகஸ்தரிடம் சர்வே இலாகாவில் உத்தியோகமாயிருந்த பொழுது இமயமலை அடிவாரத்தில் சர்வே வேலை செய்து பூலோகத்தில் உயர்ந்த மலைச்சிகரம் இமயமலையில் இருக்கிறதென்று பத்திரிகைக்கும் எழுதினாராம். ஸர் ஜார்ஜ் எவரஸ்டுக்குப் பின் வந்த ஐரோப்பிய உத்தியோகஸ்தர் அந்த சிகரத்திற்குத் தமக்கு முன் இருந்த உத்தியோகஸ்தரான எவரஸ்டு என்பவரின் பெயரை இட்டாராம். ராதா நாத சிக்டார் 1852-ம் வருஷத்தில் அதனைக் கண்டு பிடித்தாராம். அதற்கு நியாயமாக சிக்டார்ச் சிகரம் என்றே பெயர் ஏற்பட்டிருக்க வேண்டுமாம்.

**NATIONAL INSURANCE COMPANY, LIMITED.**
**Head Office:**
**NATIONAL INSURANCE BUILDING,**
**362, China Bazar Rd, Esplanade, Madras.**

**1933 Results.**

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000
The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

**Specialities.**

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

**Consult**
**NATIONAL FIRE AND GENERAL INSURANCE COMPANY Ltd.,**
Head Office:—
**NATIONAL INSURANCE BUILDING,**
**362, China Bazar Rd, Esplanade, Madras.**
for Fire, Motor & Accident policies.

**A sound Company.**
Please apply for particulars to:—
T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

**இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்**
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 53 வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.
**32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1**
இனும்! இனும்!!
**"இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி"**
இனமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.
**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)